உ

கடவுள் துணை.

நாற்பத்தெண்பெயர்களில் மகாமகத்துவம்பொருந்திய

# இராமதேவர் அருளிச்செய்த

# சிவயோகம் ௨௱.

இஃது

தஞ்சாவூர் மகாராஜா சமஸ்தானத்துவயித்தியர்.

ம - ள - ஸ்ரீ

கா நர்சாமிபு.

ஞாயாங்குட்டைஆயுள்வேதபண்டிதர்

**இலட்சுமண நாயகர்**

இவர்கள்முன்னிலையில்

மதுரை புதுவை சென்னை இம்முச்சங்கங்களில்

தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய

களத்தூர்

**வேதகிரிமுதலியார் குமாரன்**

ஆயுள்வேதபாஸ்கரன்

**கந்தசாமிமுதலியாரவர்களால்**

பலபிரதிகளைக்கொண்டு திருத்தஞ்செய்து

பரசபாக்கம்

**ஏழுமலைப்பிள்ளையவர்களால்**


தமது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.



1869.





உ

சிவமயம்.

# இராமதேவர்சிவயோக

## அட்டவணை.



---

இராமதேவர்சிவயோகம்-அட்டவணை

முற்றிற்று.

ஷ

# பிரசித்தபத்திரிகை.

இப்பொழுது அச்சிட்டிருக்கிற புத்தகங்கள்.

இதனாற் சகலருக்குந் தெரிவிப்ப தியாதெனில்.


| | |
|---|---|
| வீமேசுரஉள்ளமுடையான் | மூலமும் உரையும் |
| குமாரசுவாமீயம் | மூலமும் உரையும் |
| சினேந்திரமாலை | மூலமும் உரையும் |
| சந்தானதீபிகை | மூலபாடம் |
| சர்வார்த்தசிந்தாமணி | மூலபாடம் |
| உரோமரிஷிவிநாடிபஞ்சபட்சி | மூலபாடம் |
| பஞ்சபட்சிபலதிரட்டு | மூலபாடம் |
| பாராசரியம் | மூலபாடம் |

| | |
|---|---|
| தேரையர் வயித்தியம் | ௲௧ |
| நாலுகாண்டஜாலம் | ௲௨௱ |
| போகர் | ௮௱ |
| கருவூரார்பலதிரட்டு | ௫௱ |
| அகஸ்தியர் குருநாடி | ௱ |
| கேரளம் | ௲ |
| இராமதேவர்சிவயோகம் | ௨௱ |

அரிச்சந்திரபுராணம் மூலமும் திரிசிரபுரம் மகா வித்வஜனசேகரராகிய வி - கோவிந்தபிள்ளையவர்கள்செய்த புதிய உரையும்.

இவை வேண்டியவர்கள் சென்னபட்டணம் புரசபாக்கத்தைச்சார்ந்த நாராயணன்பாளயம் (௪௨) வது கதவிலக்கமுள்ள வீட்டில் விவேக விளக்க அச்சுக்கூடத்தலைவர், பு-ஏழுமலைப்பிள்ளையவர்களிடத்தில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

மேற்படி புத்தகங்களை அச்சிட்டவர்களனுமதியன்றி யாதாமொருவர் அச்சிடுவார்களாகில் சட்டப்படி நடத்தப்படும்.



உ

இராமதேவர்

# சிவயோகம் - உ௱.

குருவணக்கம்.

மூலமெனுமுதற்பொருளாமுத்திநடுவணையில்
மூதண்டமானதொருபிரமத்துக்கப்பால்
ஞாலமெனுந்தவமுடையசத்திபதிமேலே
நாதாந்தப்பெருவெளியினடுவொளியின்கீழே
நீலமிகுநெருப்பாறுமயிர்ப்பாலத்தப்பால்
நிறைந்தபரிபூரணமாநிஷ்களமதாகிச்
சீலமிகுந்தவமுடையோரிருதயமேதானாய்ச்
சிறந்துநின்றபரமகுருசீர்பாதந்துணையே. (௧)

வாசிமார்க்கநிலை.

பாதமெனும்வாசிதனைப்பழியவேண்டி
பத்தியுடன்மனோன்மணியைக்கண்டுபோற்றி
வேதமெனும்பொருளறியவேண்டுமென்று
வேண்டினேனதற்குவேதத்தாயும்
நீதமுடன்வாராமதேவாவென்று
நிலைநிறுத்திமதியமுர்தம்நினைவாயீந்தாள்
போதமிகுமதியமுர்தங்கொண்டபோது
புத்தியுடன்பூசைவிதிபுகலென்றேனே. (௨)

புகலென்றபோதின்மனோன்மணிதான்வந்து
பூரணமாய்மதியமுர்தம்புகட்டினாள்காண்
அகமென்றவகமதுவமுர்தியாச்சு
வம்பரத்தின்றிசனைடமடிக்கலாச்சு
செகமென்றசிவமயமுந்தெளியலாச்சு
தேவாதிதேவனென்றபெருமாச்சு
சுகமென்றபூசைவிதிதன்னுலந்தக்
சுத்தமுள்ளசத்தியையான்றொழுதேன்பாரே. (௩)

தொழுதமுறையென்னவென்றாற்சத்திபூசைச்
சுருக்கமுடன்சொல்லுகிறேனன்றாய்க்கேளு
பழுதொன்றுமில்லாதஆதிதீட்சைப்
பத்திகொண்டுமனமேசெபித்தாயாகில்
அழுத்தமென்றதேகமதுசித்தியாச்சு
ஆகாசவாக்கையுற்றுநீவாயிலே

நெழுத்தமுள்ளசத்தியென்றதேகந்தானும்
நிலத்தயின்புவுயிர்சிவத்துக்குறுதிகேளே. (௪)

உறுதியென்றசத்தியடாஉகாரதீட்சை
உள்ளுணர்ந்துமண்டலமேசெபித்தாயாகிற்
புறுதியென்றவாசியதுக்குறுதியாச்சு
பாலகனேவாசியென்றுவுயிர்தானப்பா
கருதுகின்றவுடலுயிர்தானிலத்துதானால்
காரணமாய்ச்சித்துவெகுவாடலாகும்
சுருதிபொருளானதொருகுருவைக்காணச்
சொல்லுகிறேம்பூசைவிதிநன்றாய்க்காணே. (௫)

காணுதற்குமனமென்றமகாரபீடங்
கருணையுள்ளவட்டமடாவிந்துவிந்து
ஊணுதற்குமகாரமென்றவிந்துதன்னை
உற்றுப்பாரோங்காரக்கம்பமாகிப்
பேணுதற்குக்கம்பநுனிமேலேயையா
பேரண்டமானதொருவன்னிவன்னி
தோணுதற்குவன்னியென்றாலாயிரத்தெண்மலர்க்குள்
தொடுகுறிபோல்மூர்த்தமதற்குள்ளேபாரே. (௬)

உள்ளானமதியமூர்த்தந்தன்னைமைந்தா
ஒருபோதுபணவிடைதானுள்ளேகொண்டால்
விள்ளானதேகமதற்கழிவோயில்லை
வினையானமுத்தேகமுத்தியாச்சு
கொள்ளாய்மந்திரமுஞ்சித்தியாச்சுக்
குருசுருதிமுடிவுபொருள்காணலாச்சு
தள்ளாதவஷ்டகர்மசித்தியாச்சுத்
தாயானசத்திபிடபூசைகேளே. (௭)

பூசைவிதிசக்கரம்.

கேளப்பாபூசைவிதிச்சக்கரஞ்சொல்வேன்
கிருபையுள்ளசக்கரந்தான்விந்துவிந்து
ஆளப்பாவிந்தென்றவளையத்துள்ளே
அருள்பெருகுமோங்காரமதனுட்பேரு
நாளப்பாவோங்காரமதனுட்டானும்
நடுமையமானசுழியதனுட்போடு
தேளப்பாகொட்டுதல்போற்சக்கரமுமாச்சுச்
சிவாயகுருசக்கரத்துக்கின்னங்கேளே. (௮)

இன்னங்கேள்விந்துவென்றவளையத்தின்மே
விரவிமதிகுழியென்றவளையம்போடு

வன்னமென்றமுதல்லிளையமிதந்தானெட்டு
மறுவளையம்பதிருறுமதின்மேலப்பா
சொன்னதொருமுட்பத்திரண்டுபோடு
தாருவமுள்ளவிதழன்பத்தாறுமாச்சு
வின்னமில்லாக்கோட்டைநால்வாசலிட்டு
விலாசமுள்ளதேவதையைவிள்ளக்கேளே. (௬)

பூசைசெய்யுமார்க்கம்.

கேளப்பாமேல்வாசல்பிரமபீசங்
கெணிதமுள்ளகீழ்வாசல்மாலின்பீசம்
வாளப்பாவடவாசல்ருத்திரபீசம்
வளமானதென்வாசல்மயேசன்பீசம்
வேளப்பாசதாசிவன்போலிருந்துகொண்டு
மேற்றிசையைநோக்கிச்சக்கரத்தைவைத்து
நாளப்பாதினம்பார்த்துப்பூசைசெய்ய
நல்லநாள்நினைத்தநாள்நன்மையாமே. (௭)

நன்மையுடன்பூசைசெய்யமைந்தாகேளு
நலமாகச்சுகாசனமாயிருந்துகொண்டு
உண்மையுடன்விபூதியையுந்தளமாய்ப்பூசி
உரிமையுள்ளமேருவைமுன்னிறுத்திக்கொண்டு
தன்மையுடன்பலகாரம்ரசவர்க்கங்கள்
சந்தனதாம்பூலமுடன்றயவாய்வைத்து
செம்மையுடன்தானிருந்துதியானம்பண்ணிச்
சிவமானபாத்திரங்கைதன்னில்வேண்டே. (௰க)

வேண்டியதோர்பாத்திரங்களனந்தமுண்டு
விசையொடுங்கும்பாத்திரந்தானூர்தான்காண்பார்
ஆண்டவனாமுதெடுத்துவுண்டாரையா
அதின்பிறகுசத்திமதியமுர்தமுண்டாள்
தாண்டவத்திற்றில்லைநடமாடும்போது
சங்கரனூர்நஞ்சமுதந்தானேகொண்டார்
காண்டமென்றகமண்டலந்தான்கபாலபீடங்
கயிலாசமேருவென்றபீடந்தானே, (௰உ)

தானென்றபீடமென்றுங்கபாலமென்றுஞ்
சங்கையுள்ளசத்தியென்றும்பாத்திரமென்றும்
மானென்றமந்திரத்தின்பீடமென்றும்
மகாசுத்தியானபாத்திரந்தானென்றும்
தேனென்றபாத்திரத்தின்பெருமைசொல்லச்
சிவனாலுமுடியாதுதேவிசுத்தி

கோனென்றகுருவருளால்சொல்லக்கேளு
கொடிமுடியாந்தங்கமென்றபாத்ரத்தானே, (௧௩)

பாத்திரத்தைத்தானறிந்துபத்தியாகப்
பத்திகொண்டுயிடக்கரத்தில்வலக்கரத்தாற்பற்றி
நேத்திரன்பாகமதாய்க்கடத்தைவாங்கி
நேர்மையுடன்றூன்றலங்கியம்மதனைப்பூரிக்
கோத்திரத்தின்குருவருளால்சிவ்வெனவேவாங்கிக்
குருவானபதிநோக்கிஅம்மெனவேபூசி
மாத்திரைதான்மயங்காமல்ரேசகபூரகமாய்
மனதறிவாற்கும்பகத்தில்வாசிதனைப்பூட்டே. (௧௪)

வாசிதனைப்பூட்டியோர்மாத்திரையதின்மேல்
மார்க்கமுடன்கறிவர்க்கவகையருந்தி
நேசமுடன்றூபமேற்றீபம்வைத்து
நினைவாய்த்தூபஞ்சாத்தினுட்செலுத்திப்
பாசமுடன்பதியறிந்தப்பதியில்நின்றூற்
பரமகுருதீபவொளிபளீலெனவேதோன்றும்
நாசிமுனைமீதில்குருநாதனடிவாழும்
நாதாந்தப்பேரொளியினன்மைபோலாமே, (௧௫)

ஆமப்பாசிவாயகுருசக்ரத்தைமைந்தா
ஆருக்குஞ்சொல்லாதேயையாவையா
வாமப்பால்மறியமூர்தமறிந்தோர்க்கிவாய்
மதியறியார்க்கீந்தினுல்வளமாங்கேது
தாமப்பாதன்னுடலைத்தானேகண்டு
தன்மையுடன்சிவாயகுருசக்ரத்தைவைத்து
நாமப்பாவென்றமொழிதனைநிறுத்திப்பூசை
நன்றாகப்பூசிக்கநன்மைபெறலாமே, (௧௬)

பூசையில்கூடும்பெயர்கள்,

நன்மையுள்ளபூசையிலேமைந்தாமைந்தா
நானீயுமல்லாதுவேறேவேண்டாம்
உண்மையுள்ளபெரியோர்கள்வந்தாற்சேரு
வுலகமதிற்பலகூட்டமாகாவாகா
தன்மையுள்ளசற்குருவின்பாதந்தன்னைத்
தாரணியிலறியார்தார்கோடாகோடி
வண்மைபெறச்சாஸ்திரத்தைப்பாடம்பண்ணி
வசனிப்பார்தெரிந்தவர்போல்மைந்தாபாரோ, (௧௭)

பாரப்பாபயனறியார்கோடாகோடிப்
[illegible]த்துமதியறியார்கோடி

நேரப்பாநிலையறிந்தறிவில்லார் கோடி
நிட்டூரமானமனமுடையோர் கோடி
வீரப்பாகொண்டுமனதறியார் கோடி.
வேசையின்மேலாசைகொண்டவீணர் கோடி
காரப்பாலகிரிகொல்லுலகிரிதனையறியார்
காசினியில்மெத்தவுண்டுகண்டுதேறே, (௰அ)

தேறுதசித்தரிடம்பேசவேண்டாம்
ஜெபதபங்களறியாரைச்சேர்க்கவேண்டாம்
கூறுதசொற்களைத்தான்கூவிக்கூவிக்
குணமறியான்மனமறியான்குருட்டுமாடு
போராசைத்தான்பிடிக்துப்பேய்போலோடிப்
பேய்க்கூற்றாய்த்திரிவாரையடுக்கவேண்டாம்
ஆறுனதில்லறமேசத்தியென்று
அமர்ந்திருப்பான்கோடியினிலொருவன்றானே, (௰௯)

ஒருவனடாகோடியிலேஒருவனுண்டு
உலகத்தோடொத்துமனதறிவாய்நிற்பான்
சிறுவனடாவறுமையிலேசென்றேநிற்பான்
சித்துமிகுத்துடையவன்றன்வனேயாகுங்
குருமொழியைமறவாதான்குருவேயாகுங்
குண்டலியினந்திபொலிகூறுவான்பார்
திருவிருந்தப்பதியறிந்துவாலைபூசை
செவ்வையாய்ச்செய்தவனேசித்தனாமே, (௨௰)

மானதவாலைபூசை,

சித்தமென்றபெரியோர்கள்பூசைமார்க்கம்
செப்பினார்வெகுசோலியாகமைந்தா
பத்திகொண்டுபூசைவிதிநன்றாய்ச்சொன்னேன்
பக்குவத்தைச்சித்தர்கள்தானறிந்துக்கொண்டு
சுத்தருடன்சூட்சமதாய்வாலைபூசைச்
சொன்னவன்றன்றேறவனடாவென்றுபேசிப்
புத்திபுடன்கண்டவர்தானடக்கம்பண்ணிப்
பூரணமாங்குகைதனிலேவைத்திட்டாரே, (௨௧)

வைத்திட்டவிதங்களைநான்தான்சென்று
மலைதோறுஞ்சித்தரிடங்கண்டுபேசிக்
கைத்திட்டமானதொருவாலைபூசைக்
கருவானநூல்வாங்கிநல்லோர்க்கீந்தேன்
பொய்த்திட்டமனதோர்க்குயிந்நூல்கிட்டிப்
பூரணமாய்நன்மனதால்நிற்பானப்பா

மெய்த்திட்டமானதொருராமவாக்யம்
மேலர்னவாக்யுமென்றுபணிந்திட்டாரே, (உ௨)

பணிந்திட்டமானதமரவாலபூசைப்
பக்குவத்தைச்சொல்லுகிறேன்பண்புள்ளோர்க்குக்
கணிந்திட்டமனதானகனிவால்மைந்தா
கருணையுள்ளபூரணத்தைக்கருத்திலேந்தி
அணிந்திட்டோசகத்தால்கும்பகத்தைப்பற்றி
அப்பனேபூரணத்தைப்பூரிப்பூரி
தணிந்திட்டமூலமதில்வாசிகொண்டு
தானிருத்திதீபவொளிதான்தானுமே, (உ௩)

ஆமப்பாமானதமாம்பூசைதன்னை
ஆர்செய்வார்சித்தாதிசித்தன்செய்வான்
காமப்பால்மதமீறிநேசமுற்றக்
கன்மிகள்தான்செய்தாக்கால்மிந்துபோவான்
வாமப்பால்வாமத்தைமகிழார்தன்னை
மகத்தானகுருவென்றேமகிழ்ந்துநில்லு
தானட்பாதன்தேகஞ்சுத்திபண்ணிச்
சதாசிவன்மேல்சிந்தையதாய்த்தானேநில்லே (உ௪)

நில்லென்றலகிரியிலேயனந்தமுண்டு
நேர்மையுள்ளலகிரியடாநாதம்நாதம்
சொல்லென்றால்வெளிதோன்றச்சொல்லலாகா
சொல்லற்றமவுனமதாயிருக்கவேண்டும்
வில்லென்றவிசையுடையமனத்தோர்க்கையா
விளம்புகிறேன்ரகசியமாய்விளம்புறேன்யான்
கல்லென்றலகிரியொன்றுகஞ்சாவொன்று
கனமானமந்திரமாஞ்சரக்கதொன்றே. (உ௫)

ஒன்றானபூரணமாமாதிவஸ்து
ஓகோகோவிதுநாலும்பிர்மகற்பம்
நன்றாகநாலினிடவிபரங்கேளு
நலமானவாரணிக்கிம்மூலிகைதான்பெரிது
நின்றுமூலிகைக்குமந்திரந்தான்பெரிது
நேர்மையுள்ளமந்திரத்துக்கதிகங்கேளு
குன்றாதபூரணமாமாதியாதி
குருவானவாதிவஸ்துக்கதிகங்காணே. (உ௬)

காணாதபூரணமாம்வஸ்துதன்னைக்
காசினியிலறியப்போராரையா

பேறுமதுலகத்தோர்மாண்டுபோனார்
பிலமானவஸ்துவடாயேகவிந்து
தோறுதசத்தமடாதொளிக்கும்வஸ்து
துருவமுள்ளமேருவடாவண்டவஸ்து
பூறுதபொருளுடையபூரணமாம்வஸ்து
பூரணமாய்நின்றிலங்கும்பூரணமதாமே. (௨௭)

வாரணிகுணம்.

தாமப்பாதாயினிடபருவஞ்சொன்னேன்
தன்மையுடன்பூசிக்கக்காலங்கேளு
நாமப்பாசொல்லுகிறேனுதயகாலம்
நன்றாகவாரணியையிறக்கிமைந்தா
வாமப்பால்மதியானவமுர்தமென்று
வணக்கமுடன்பாலதனைகையிற்கொண்டு
காமப்பால்தனக்குமொருசுத்திகேளு
கனிவானமுப்பழமுமிதற்காம்பாரே. (௨௮)

பாரப்பாபழமறிந்துப்பாலைக்கொள்ள
பருவமுள்ளவாலைத்தாய்பாதங்காணும்
நேரப்பாநின்றவனுமகனேயென்று
நினைவாகச்சரிதைவழிநன்றாய்ச்சொல்லி
காரப்பாசரிதைவழிநன்றாய்க்கார்த்தால்
கனமானசாலோகபதவிகாணும்
ஆரப்பாவறியார்கள்சாலோகபதவி
யரகராவப்பதவிமுத்தியாமே. (௨௯)

முத்தியுள்ளவாரணியின்குணத்தைச்சொன்னேன்
மூர்க்கமுடன்பூசிக்கக்காலஞ்சொன்னேன்
சித்திபெறமூலியொடுதியானஞ்சொன்னேன்
சிவசிவாமுப்பதவித்திறமுஞ்சொன்னேன்
புத்தியுள்ளநாதாக்கள்மறைப்புஞ்சொன்னேன்
பூரணமாய்நின்றிலங்கும்வாசிசொன்னேன்
பத்திகொண்டுநின்றவர்க்குப்பலிக்குஞ்சித்தி
பலியாதுநினைவறியாப்பாவிமாரே. (௩௰)

மாரானமூலிகையைவாங்கிமைந்தா
வணக்கமுடன்விளாக்காலையபிதுக்கிநன்றாய்
நேரானநேரமடாவுச்சிநேரம்
நேர்மையுள்ளமூலிகையைவைத்துக்கொண்டு
கூரானமூலிகைக்குச்சுத்திகேளு
குணமாகச்சக்கரையைபக்கலந்துக்கொண்டு

ரோகமதியமதிர்பூசைசெய்யத்
தேவியெனும்புவனைசதந்தீர்க்கமாமே, (௫௧)

மூலிகைக்குணம்,

தீர்க்கமுள்ளபுவனையவள்முன்னேநின்று
செவ்வையுடனென்மகனேசெப்பக்கேளு
மார்க்கமுள்ளமூலிகைக்குக்கிரியைசித்தி
மகத்தானகிரிகையிலேமனதுதோய்ந்தால்
ஆர்க்கும்நிகரில்லாதவறிவேதங்கும்
அந்தரியுஞ்சாமீபவருளைக்காட்டும்
பார்க்கின்றபலசமயநூலைப்பார்க்கப்
பத்திகொண்டுநின்றறிவுபதியுந்தானே, (௫௨)

தானென்றமூலிகையின்விபரஞ்சொன்னேன்
தாயானமனோன்மணிதன்றவத்தினாலே
தேனென்றமந்திரமாமமூர்தந்தன்னைத்
தெகட்டாதவமூர்தமதைத்தெளிவாய்வாங்கி
பாலென்றபாலமூர்தந்தனக்குமைந்தா
பக்குவமாஞ்சுத்திதனைப்பகரக்கேளு
கோனென்றபாத்திரந்தான்சுத்திசுத்திக்
குருவானபாத்திரத்தைக்கரத்தில்வேண்டே, (௫௩)

மந்திரத்தின்குணம்,

வேண்டியந்தப்பாத்திரத்திலமூர்தம்விட்டு
விபரமுடன்மாலையிலேபூசைபண்ணி
ஆண்டவனாற்பதிநோக்கித்தியானஞ்செய்து
அருள்பெருகவர்க்கவகையமுதுகொண்டு
பூண்டமனதுறுதியினால்ரேசகமேசெய்து
பூரணமாய்க்கும்பகத்திற்பூரணமாய்நின்றால்
தாண்டவத்திற்சிவனைவென்றதிரிபுரைதான்வந்து
தன்மையுள்ளகன்மணியென்றருள்செய்வாளே (௫௪)

அருளீய்ந்துயோகத்துக்கறிவுஞ்சொல்லி
அருமையுடன்பூரணத்திலறிவாய்நின்றால்
திருவிருந்தபதியானசாரூபபதவி
சிவசிவாசீக்கிரத்தில்சித்தியாகும்
மருவிருந்தமவுனமடாமனோன்மணியின்வீடு
மார்க்கமுடன்கண்டுதவும்யோகஞ்செய்வார்
குருவிருந்தபதிநோக்கித்தவமேசெய்தால்
கூ[illegible]மடாகுருலவக்கரேர். (௫௫)

## பூரணத்தின் குணம்.

காரப்பாமந்திரத்தின்மகிமைசொன்னேன்
காசினியிலிந்நூலைக்காட்டவேண்டாம்
வீரப்பாசெய்வோரையடுக்கவேண்டாம்
வேதாந்தமறியாரைச்சேர்க்கவேண்டாம்
தேரப்பாமனந்தேறித்தெளிவாய்நில்லு
தெளிவானபூரணத்தின்செய்கைகேளு
ஆரப்பாயறிவார்கள்பூரணத்தின்செய்கை
யரகராகுருவருளாலறிவிப்பேனே, (௬௬)

அண்டபிண்டசமாதிவைப்புமெழுகு.

அறிவானபொருளாகுமண்டபிண்ட
மமைந்தகருப்பிண்டமதினண்டந்தன்னைக்
குறியானதொடுகுறிபோலண்டம்வாங்கிக்
கூர்மையுடன்மேலோட்டைச்சீவிப்போட்டுப்
பரியானவண்டமென்றயிளநீர்தன்னைப்
பக்குவமாய்க்கண்திறந்துரவிசீசஞ்செலுத்தி
திருவானவெடியுப்பைப்பாண்டமதிலிட்டுத்
தெகட்டாதவண்டமதையதன்மேல்வையே, (௬௭)

வைத்துமேலுப்பிட்டுமேற்சட்டிமூடி
மார்க்கமுடன்சீலைசுத்திமண்பூசிமைந்தா
கைத்திட்டமாகவேசமாதிதனில்வைப்பாய்க்
கனமாகநீயிருக்குமொடுக்கமதுதனிலே
மெய்த்திட்டமாகவேமண்டலமேசென்றால்
மேன்மைபெறச்சமாதிதன்னைவிரும்பிமிகத்திறந்து
மைத்திட்டமாகவேபானைதனிலண்ட
மார்க்கமுடனண்டமதைமனதறிவால்வாங்கே, (௬௮)

வாங்கியந்தவண்டத்தின்கருவைநீயு
மகத்தானசீங்கானில்விட்டுமைந்தா
பாங்குபெறரவிதனிலேவைத்துக்காரு
பக்குவமாய்ப்பின்னுமதில்ரவிசீசஞ்சேரு
தீங்கில்லாக்கரியுப்புநாலிலொன்றுபொடித்துச்
செவ்வையுடன்பூரணத்திற்சேர்த்துமிகநன்றாய்
தாங்காதரவிதனிலேகாயவிட்டுப்போடு
தன்மையுடன்காய்ந்துநன்றாய்மெழுகாகுமாமே. (௬௯)

ஆமப்பாமெழுகெடுத்துப்பதனமாக
அன்பாகமேருதனிலடக்கம்பண்ணி

தாமப்பாவெவ்வேளை அவ்வேளை தன்னிற்
றயவாகமனதிவால் தானிருந்து கொண்டு
நாமப்பா சொல்லுகிறோம்மேருவைமுன்னிறுத்தி
நன்மையுடன்மானதமாம் பூசையது செய்து
காமப்பாலானபரிபூரணமேயென்று
காயாதிகர்ப்பமென்று துணிந்துமனம்போற்றே, (சய)

போற்றுவதுபூரணமே யேகவஸ்து
பொருளான அருவுருவே யென்றுபோற்றி
நாற்றிசையுமென்னையாண்டுக்கொள்ளவந்த
நாரணியேகவுமாரிநாதாந்தத்தில்
தேற்றியேமனந்தேற்றித்தெளிவாய்நீயுஞ்
சித்தைமனதொன்றாகவென்னையாட்கொண்டு
காத்தருள்வேண்டுமென்றுமைந்தாநீயுங்
கருணையுள்ளபூரணத்திற்பணிவிடைதானெடுமே. (சக)

எடுத்திடுக்கையைவைத்துவலக்கரத்தால்மூடி
யேகபரிபூரணியேயென்றுபோற்றி
அடுத்தமனேச்சுழிமுனையில்மனதைநாட்டி
யன்பாகரேசகபூரகமுஞ்செய்து
தொடுத்தமனதவிவாலேவாசிபூட்டித்
தொடுகுறிபோற்கும்பகத்திலிருந்துகொண்டு
கொடுத்துவிடுநாலின்மேற்பூரணத்தைமைந்தா
கும்மெனவேவாய்மூடியிருந்துமிகப்பாரே. (சஉ)

பாரப்பாநீயிருந்துநாவுதனிலமூர்தம்
பாயுமடாவர்தமூர்தம்பசிதீரவுண்ணு
ஆரப்பாவுனக்கீடுசொல்லப்போறேன்
அரகராதேவாதிதேவனாகும்
நேரப்பாகுருவருளால்மனோன்மணிதான்வந்து
நிலைநிறுத்திஞானபதம்நன்றாய்ச்சொல்லி
பேரப்பாநீபெற்றபேர்தானென்று
பெருமையொடுசாயுச்சியபதவியருள்வாளே. (சஙா)

கட்டுக்கொடிகருவித்தை.

வாளப்பாசாயுச்சியபதவிதனைமைந்தா
வரிசையுடநால்பதமும்நன்றாய்ச்சொன்னோம்
ஆளப்பாநால்பதமுமாண்டவர்களாரு
அருமையுள்ளசித்தரிலேகோடிக்கொன்று
மேளப்பாலோகமுடன்கீழுலகம்மொண்டில்
விபரமுடன்வாழுமுயிர்பயிர்கட்கெல்லாம்

கேளப்பாசெய்யாதவசியமொன்றுசொல்வேன்
  கூற்புத்தின்மேற்கட்டுக்கொடியதனை வாங்கே. (௪௪)
வாங்கியந்தக்கொடியதனைவுலரப்போட்டு
  மார்க்கமுடன்கருக்கிநன்றாயெடுத்துக்கொண்டு
தீங்கில்லாவெடியுப்புகர்ப்பூரஞ்சீனந்
  தெகட்டாதயிந்துப்புகரியுப்புங்கூட்டி
பாங்குபெறவஞ்சப்புந்தண்ணீர்விட்டுப்
  பக்குவமாயறைத்துருட்டிவட்டுப்பண்ணி
ஆங்கதைகொண்டேயெருவிற்புடத்தைப்போடு
  அப்பனேதீய்ப்பிடித்துக்கருகுந்தானே. (௪௫)

கருகிநின்றகரிக்குநீகாய்க்கறியுங்கூட்டிக்
  கலவமதில்பழச்சாற்றால்நன்றாயாட்ட
உருகிநின்றமெழுகதுபோல்மையுமாகும்
  உகமையில்லாமையதனைச்சிமிளில்வைத்து
பெருகிநின்றமையெடுத்துத்திலர்தம்போட்டுப்
  பேருலகிற்சென்றுவாமைந்தாமைந்தா
தருகிநின்றவுயிர்ப்பயிர்கள்வணக்கமாகித்
  தன்பதமேகெதியெனவேசார்வார்பாரே. (௪௬)

பாரப்பாவசியமொன்றுசொன்னேனித்தப்
  பக்குவத்தையொருவருக்கும்பகரவேண்டாம்
தேரப்பாமனத்தேறிவசியம்பூண்டு
  செவ்வையொடுதவசிருப்பாய்ச்சிவனேயென்று
காரப்பாபெரியோரைத்தொண்டுபண்ணிக்
  காசினியில்நல்மையுள்ளநாட்டமாய்நில்
பேரப்பாதேவாதிதேவனென்பார்
  பெருமையுள்ளவஞ்சனத்தின்வகையைக்கேளே. (௪௭)

அஞ்சனம்.

கேளப்பாவரிதாரக்கட்டிவாங்கிக்
  கிருபையுள்ளகல்லுப்புஞ்சருகுங்கூட்டி
மாளப்பாகல்வமதிலொட்டிப்பில்லை
  மார்க்கமுடன்தான்பிடித்துக்காயப்போடு
கோளப்பாவில்லாயற்புடத்தில்நன்றாய்க்
  கூர்மையுடன்கருக்கியதையெடுத்துக்கொண்டு
தேளப்பாயேரண்டத்தெண்ணெய்விட்டு
  தெளிவாகமத்திக்கமையாய்ப்போமே. (௪௮)

மையானவஞ்சனத்துக்கிதுவேமூலம்
  மார்க்கமுடனஞ்சனதேவிதன்னை

மெய்யாகவவள்பதத்தைப்பணிந்துக்கொண்டு
மேன்மைபெறச்சிமிள்தனிலேயடக்கம்பண்ணி
கையாகமைச்சிமிளைத்திறந்துப்பாரு
கண்கரித்துநீர்விழுந்துதிறக்குங்கைதான்
எய்யாதபாதாளந்துலைதானேயும்
என்மகனேயிதில்நீதிகள்காணலாமே. (௪௯)

காணுவதுவெகுநீதிகள்கண்டாயானால்
கண்ணிமையாற்பாராதேகடக்கநில்லு
பேணுவதுபெத்தநீதியென்றாயாகிற்
பேரொளியாந்தீபவொளிபேணித்தேடு
தோணுவதுசுருபநிலையதுதானப்பா
சுருபமென்றாலாரறிவார்சோதிசோதி
ஊனுவதுவுடல்பொருளோடாவிமூன்று
முற்றுப்பார்வெட்டவெளியாகுந்தானே. (௫௰)

தானென்றசரிதைமுதல்ஞானவரைசொன்னோம்
சமரசமாய்த்தேகவச்சிரக்காயஞ்சொன்னோம்
கோனென்றகுருவருளால்தவமகிமைசொன்னோம்
கூர்மையுள்ளதவமதுக்குநிஷ்டைசொன்னோம்
மானென்றநிஷ்டைதனக்குறுதியான
மகத்துவமாந்தெரிசனத்தைவழுத்தக்கேளு
தேனென்றபிரிதிவாம்தனோடொக்கத்
தெகட்டாதவமுர்தமென்றபூரமாமே. (௫௧)

வர்னக்களிம்பு.

பூரமுடன்லிங்கமென்றதேய்வுசேரு
புசழாகவாயுவென்றநாகஞ்சேரு
வாரமென்றநாலுடனேமாயிநாத
மார்க்கமுள்ளதுருசுடனேவுப்புங்கூட்டிப்
பாரமென்றமனதிலெண்ணியேழுங்கூட்டிப்
பக்குவமாய்க்கலவமதிற்பழச்சாற்விட்டு
காரமென்றசாரமதைவிட்டேயாட்டிக்
களுப்பானபருவமதிற்சிமிளில்வையே. (௫௨)

வையப்பாசிமிளில்வைத்தகளிம்புதன்னை
மார்க்கமுடன்பணவிடைதானெடுத்துக்கொண்டு
மெய்யப்பாகளஞ்சிவெள்ளித்தகட்டிற்பூசி
விருப்பமுடனோட்டில்வைத்துச்சீலைசெய்து
றையப்பாபெருவடுக்கிப்புடத்தைப்போடு
[illegible]ன்று[illegible]ருவைத்தொழுதுநில்லு

பையப்பாபுடமாறியெடுத்துப்பாரு
பழுத்துமிகப்பதினாறுவயதாம்பாரே. (௪௮)

வேதைமார்க்கம்.

பாரப்பாசெம்பினிலேதடவிநல்ல
பக்குவமாய்ப்புடம்போடப்பழுக்குமப்பா
நீரப்பாகுடவனைத்தான்றகடாய்த்தட்டி
நேர்மையுள்ளமருந்ததனைத்தடவிக்காய்ச்ச
ஆரப்பாவதிவார்கள்குடவன்மாற்று
ஆறுவயதானதொருபொன்றானுந்
தேரப்பாமனந்தேறியோகம்பாரு
சிவசிவாசிவயோகமுத்தியாமே. (௪௯)

முத்தியுள்ளதவமகிமைக்குறுதியென்ன
முதலானயோகமடாசிவயோகந்தான்
பத்திகொண்டுபார்த்தவனேசித்தன்சித்தன்
பரமசிவயோகமதைப்பாரார்தானும்
அத்தியென்றதேகமதுவழிந்துபோகும்
அழிந்தாலுமோட்சநிலையறியமாட்டார்
சித்தமெந்தன்பாக்யமென்றுசிவயோகத்தைத்
தேர்ந்தவனேசிவயோகியாகுந்தானே. (௫௰)

சிவயோகப்பெருமை.

தானேதான்சிவயோகஞ்செய்யவேண்டும்
தன்மையுள்ளபெரியோரைப்பணியவேண்டும்
வீணேதான்பிரிந்திருமேலேதுண்டப்பா
வீண்பேச்சாய்த்திரிவாரையடுக்கவேண்டாம்
தூணேதான்றுரும்பானுந்துரும்புதூணுஞ்
சொல்லுவார்பெரியோர்கள்பழமையாகும்
பூணேநீசிவயோகம்பூண்டால்தேகம்
பொன்றுரும்புபோல்தேகம்புதுமையாமே. (௫௧)

ஆமப்பர்தேகத்துக்குறுதியென்ன
அருளானகாயாதிகர்ப்பங்கர்ப்பம்
தாமப்பாகாயாதிகர்ப்பங்கொண்டால்
தவமானதவப்பலந்தான்றுவேயாகும்
போமப்பாவபமிருத்துவெங்கேபோச்சு
புத்திகொண்டபூரணத்திலொடுங்கிப்போச்சு
நாமப்பாவென்றுபதமெங்கேபோச்சு
நந்தியென்றதீப்பிடித்தெரிந்துப்போச்சே.

போச்சப்பாதந்தியென்றசெந்திப்பட்டுப்
பேரமிர்தநளாதிரையும்பொடித்துப்போச்சு
மூச்சப்பாவட்டங்கிநின்றவண்டந்தன்னில்
முனையானசுழிமுனைமேற்றீபந்தோன்றுங்
காச்சப்பாவத்திபந்தன்னிற்றேகங்
காச்சினல்தேகமதில்கசடுபோகும்
ஆச்சப்பாவக்கசடுகண்டுதானல்
அப்பாத்தின்தெரிசனத்திலடுக்கலாமே. (௱௮)

சாஸ்திரவிபரம்,

அடுக்காறுவாயிரத்தையடுத்துப்பாரு
வதின்பிறகுபலதிரட்டையறிந்துபாரு
முடுக்கானவினோதவகைநூறும்பாரு
மூர்க்கமுள்ளவயித்தியத்தைமுழுதும்பாரு
ஒடுக்கமுள்ளபலபாஷையுறுதிபாரு
வுண்மையுள்ளசோதியமாம்பத்தும்பாரு
திடுக்கமுள்ளமனதொடுங்காமர்வாக்யஞ
செப்பினசொற்றவாமற்றேர்ந்துபாரே. (௱க)

பாரப்பாநாம்சொன்னவாக்யந்தன்னிற்
பழுதொன்றும்வாராமற்பற்றிப்பார்க்க
நேரப்பாசிவலோகமார்க்கஞ்சொன்னேன்
நெறியானநூல்தேடிநினைவாய்ப்பாரு
தேரப்பாமனந்தேறுந்தேகந்தேறுஞ்
சிவசிவாவாசியதற்குறுதிதோன்றும்
வீரப்பாகொண்டுதலைதறிக்குமாந்தர்
வீணருடன்பேசாதேவிண்ணைப்பாரே. (௬௰)

தன்னைத்தானறிதல்.

விண்ணைப்பார்தன்னைப்பார்மண்ணைப்பாரு
மேன்மைபெறக்குருவருளைமேவிப்பாரு
பெண்ணைப்பார்த்தலையாதேபெண்டான்றேனும்
பிரியமுடன்றேகமதைப்பேணிப்பார்த்தால்
கண்ணைப்பாதலங்குமடாவந்தக்கண்ணாற்
காணலாஞ்சித்துவெகுகண்ணிற்காணும்
மண்ணைப்பாவென்றுசடந்தன்னைப்பேணு
மாந்தருக்குயென்னவருமண்தானுமே. (௬௧)

ஆமப்பாமண்ணானபிரிதிவினாலே
தேகமெல்லாமுண்டாச்சுதேதென்றுக்கால்

வாமப்பால்மதியமூர்தந்தன்னாலந்த
மகத்தானவாகாயஞ்சிவமுமாச்சு
நாமப்பாசொல்லுகிறேன்மண்ணும்விண்ணும்
நலமாதிவாதியர்கஞ்சத்திசிவமாச்சு
தாமப்பாகுருவருளாற்சத்திசிவந்தன்னைத்
தாரணியிற்கண்டவனேதவசியாமே. (கஉ)

ஆமென்றதவமுறைக்கில்லையொன்று
அம்பாகச்சொல்லுகிறேன்நன்றாய்க்கேளும்
நாமென்றசொல்லகத்திப்பூமிநாதம்
நன்றானநாதமடாசத்திசத்தி
தாமென்றபிரிதிவார்ந்தன்னேடொக்கத்
தயவானகெவுரியுடன்சிலையுங்கூட்டி
உளமென்றநாகரசங்கூடச்சேர்த்து
ஓர்நிறையாய்க்கலவத்தில்நன்றாயாட்டே. (கங)

ஆட்டுவதுசம்பழத்தின்சாறலாட்டி
யப்பனேநெட்டடங்கநன்றாயாட்டிக்
கூட்டுவதுஒன்றாக்கிவட்டுப்பண்ணிக்
குண்டலமாஞ்சட்டிதனில்நடுவேவைத்துப்
பூட்டுவதுதாம்பரத்தின்கிண்ணிதன்னால்
பொருந்தவேமூடிநன்றாய்மணலும்போட்டுத்
தாட்டிகமாய்த்தீயெரித்துப்பதத்தைப்பாரு
தயவானபதமதுவைச்சொல்லுவேனே. (கச)

வேதமார்க்கம்கூடறுவது.

சொல்லுவேன்சொரிந்தமணல்கருகிற்றானால்
சுத்தமுள்ளபக்குவமென்றெடுத்துக்கொண்டு
வெல்லுவேனிதற்கிரட்டிதாம்பரத்தை
விரையாகவுருக்கியந்தமருந்தைத்தானும்
நல்லுவேனுருக்குமுகந்தன்னிலீய
நாற்றமுள்ளசெம்பதுவுங்கட்டிப்போச்சு
கொல்லுமவனென்றசொல்லிவெள்ளிபொன்னில்
குற்றமற்றசெம்புமூன்றொன்றாய்க்கூட்டே. (கரு)

கூட்டிநன்றாய்க்குகைதனிலேயுருக்கிப்பாரு
குருவானதிருவருளால்மாற்றெட்டாகும்
தாட்டிகமாய்ப்பத்திலொன்றுதங்கஞ்சேர்க்கத்
தயவானதங்கமடாவென்னசொல்வேன்
பூட்டானபூட்டறுக்குஞ்சத்திசிவந்தன்னைப்
பூரணமாய்க்கண்டமனைதறிவாய்நின்றால்

நீட்டிமுனைமழுங்காதகுழிமுனையின்மீதே
திருவானஅறிவுருதீபவொளியாமே. (௬௬)

ஆம்பாயின்னமொருகருவைக்கேளு
ஆதியென்றலிங்கமுடன்றுருசுங்கூட்டித்
தாமப்பாகண்டிடைக்குஆதிசேர்த்துச்
சம்பழத்தின்சாறதினாற்கலவத்தாட்டி
நாமப்பாசொன்னபடிவட்டுபண்ணி
நன்மைபெறமணல்மறவிற்புடத்தைப்போடு
சாமப்பாசரக்குவகைமூன்றுதானுஞ்
சமரசமாய்க்கட்டியதுதிட்டமாமே. (௬௭)

திட்டமுடன்பதமறியெடுத்துக்கொண்டு
செவ்வையுடன்செம்புருக்கிமருந்தையீவாய்
இட்டமுடன்செம்பிடைக்குரெட்டியீவா
யிருண்டசெம்புகட்டியதுயிறுகிநிற்கும்
பட்டசெம்புநாலுடனேவெள்ளியாகும்
பக்குவமாயுருக்கிப்பார்மாற்றுருகும்
நட்டமென்னபத்திலொன்றுதங்கஞ்சேர்க்க
நயமாகவெட்டுவயதாகும்பாரே. (௬௮)

வெள்ளிவித்தை,

பாரப்பாபிரிதிவின்கடாட்சத்தாலே
பக்குவமாய்வெகுதொழில்களாடலாகும்
தேரப்பாமனந்தேறிவெள்ளிவித்தைச்
செவ்வையாய்ச்சொல்லுகிறோம்நன்மையாக
நீரப்பாநிறைந்துநின்றவெள்ளியத்தில்
நினைவாகவந்திருக்கும்ரசத்தைத்தாக்கி
சேரப்பாவதற்குநிகர்பாஷாணத்தைச்
சேர்த்துநன்றாய்ப்பிரிதிவைச்சேர்த்துக்கொள்ளே (௬௯)

சேர்த்துநன்றாய்க்கலவத்திற்பழச்சாற்றைவிட்டுச்
செவ்வையாய்த்தானரைத்துவட்டுபண்ணிப்
போற்றிநன்றாய்மண்மறைவிற்புடத்தைப்போடு
போக்கானநாற்சரக்குங்கட்டிப்போகும்
பார்த்திபனேயதையெடுத்துவைத்துக்கொண்டு
பதிவாகச்செம்புருக்கியதனிற்றுக்கு
நாற்றிசையுமெய்க்கவேதான்வெகுசுறுப்போகும்
நன்றாகப்பத்திலொன்றுவெள்ளிசேரே, (௭௰)
சேர்த்துருக்கிப்பார்க்கவெள்ளிமாற்றுத்தானும்
செவ்வையுடன்பத்துமாற்றுமப்பா

பார்த்திபனேயிவ்வேதைபத்திப்பார்த்து
பத்திகொண்டுபோகமதில்பதிவாய்நில்லு
பார்த்தருளவேண்டுமென்றுகுருவைக்காரு
கருவானமதியமுர்சமுன்னேகொள்ளு.
பூர்த்தமலர்வாசனைபோல்யோகநிஷ்டை
புந்தமுடனாசனமும்புகலக்கேளே, (எக)

( நிஷ்டைவியாம்: )

கேளப்பாநிஷ்டையிடவிபரந்தன்னைக்
கெணிதமுள்ளபிர்மநிஷ்டைமாலினிஷ்டை
கோளப்பாயில்லாதருத்ரநிஷ்டை
குருவானமயேஸ்பரத்தினிஷ்டைதானும்
ஆளப்பாசதாசிவத்தினிஷ்டையோடே
ஐந்துநிஷ்டையாகுமதின்விபரங்கேளு
வாளப்பாபிர்மநிஷ்டையேதென்றக்கால்
மார்க்கமுடன்சுகாசனமாயிருந்துக்கொள்ளே. (எஉ)

பிர்மநிஷ்டை.

இருந்துகொண்டுசுகாசனமாய்மைந்தாநீயு
மின்பமுடன்ரேசகபூரகமும்பண்ணி
அருந்தவமாய்க்கும்பகத்திலிருந்துக்கொண்டு
அசையாதமூலமதையன்பாய்ப்பார்த்தால்
திருவிருந்தமலர்க்கமலமீதிலேதான்
தேவனெனும்பிர்மத்தைத்தெரிசிப்பாய்பார்
குருவிருந்தகுண்டலியின்மூலமப்பா
குணமாகவம்மூலங்குறியாம்பாரே. (எங)

மாலினிஷ்டை.

குறியானபிர்மத்தினிஷ்டைசொன்னேம்
குணமாகவதின்மேலேகூறக்கேளு
அறிவானமாலினிடநிஷ்டைதானும்
அப்பனேயஷ்டயோகமமைத்துக்கொண்டு
விரிவானரேசகபூரகமும்பண்ணி
மேலானகும்பகத்தில்வாசிபூட்டி
நெறியானபூரகத்தைப்பார்த்தாயானால்
நிசமாகவிஷ்ணுபதம்நேரலாகும். (எச)

உருத்திரநிஷ்டை.

ஆமப்பாமாலினிடநிஷ்டைசொன்னேம்
அரகாருத்திரநிஸ்டையருளக்கேளு

நாமப்பாசொல்லுகிறோம்பாதம்ரெண்டும்
நன்றாகவிசைபூட்டித்துடைமேலேற்றித்
தாமப்பாரேசகபூரகமும்பண்ணித்
தன்மைபெறக்கும்பகத்தில்வாசிபூட்டி
வாமப்பால்மதிபெருகுமனாகதத்தை
மார்க்கமுடன்பார்த்ததினால்வளமைகேளே. (௭௫)

வளமையென்னசொல்லுகிறோம்நன்றாய்க்கேளு
மார்க்கமுள்ளருத்திரனைவளமாய்க்காண்பாய்
தளமைபெறருத்திரனைக்கண்டபோது
சகலசவுபாக்கியமுந்தானேதங்கும்
இளமையுள்ளருத்திரநிஷ்டைசொன்னோமையா
ஏகாந்தமஷ்டிட்டராணிஷ்டைகேளு
நலமைபெறக்குந்தவைத்துவலக்கால்தூக்கி
நன்றாகவிடக்கால்மேல்நயந்துபூட்டே. (௭௬)

மயேஸ்பரநிஷ்டை.

பூட்டியந்தக்கையிரண்டும்நிலத்திற்றாக்கிப்
பூரணமாய்ரேசகபூகணமும்பண்ணித்
தாட்டிகமாய்க்கும்பகத்தில்வாசிபூட்டித்
தயவாகவிசுத்திநிலைதன்னைப்பார்த்தால்
நாட்டதிகமாகமயேஸ்பரனார்பாதம்
நன்றாகத்துலங்குமடாநயந்துபாரு
தேட்டானதெட்டுகள்தானென்னவென்றால்
சிவசிவாவைத்துநிஷ்டைதிறமாய்த்தேடே. (௭௭)

சதாசிவநிஷ்டை.

திறமாகமயேஸ்பரத்தினிஷ்டைசொன்னோம்
சிவசிவாசதாசிவத்தினிஷ்டைகேளு
உறமாகவொட்டியாணம்பந்தம்பண்ணி
ஒருமையுடன்யோகதெண்டையுட்கைசேர்த்து
நிறமாகவிபூதியுந்தளமாய்ப்பூசி
நேசமுடன்ரேசகபூரகமுஞ்செய்து
பரமானகும்பகத்தில்வாசிபூட்டிப்
பத்திகொண்டுஆக்கினையைப்பதியாய்ப்பாரே. (௭௮)

பார்க்கையிலேசதாசிவத்தின்பாதந்தோன்றும்
பதிவானமனோன்மணிதானமுதர்மீவாள்
தீர்க்கமுடனந்தமூர்தங்கொண்டபோது
சிவசிவாகயிலாயத்தேகமாறும்

மார்க்கமுள்ளமதியமூர்தந்தன்னாற்றேகம்
மகத்தானதேகமடாபிர்மம்பிர்மம்
ஆர்க்குமிந்தபிர்மபதங்கிடைக்குமோதான்
அருளானபூரணத்தாலமைக்கும்வாறே. (௭௯)

மதியமூர்தலேகியம்.

வாரானமதியமூர்தமொன்றுசொல்வேன்
மகத்தானவமூர்தலேகியந்தான்மைந்தா
பேரானவாணியோர்படிதான்வாங்கிப்
பிரியமுடனைந்துபலஞ்சர்க்கரைதான்சேர்த்து
கூராகவடுப்பேற்றித்தீயைமூட்டிக்
குணமாகப்பாகுவருஞ்சமயந்தன்னில்
சீராகச்சாதிக்காய்சாதிப்பத்திரித்
திறமானகிராம்புமூன்றொன்றால்வாங்கே. (௮௦)

வாங்கடாமுச்சரக்குமூன்றுபலமாக
மைந்தனேயிதற்கிரண்டுமூலிகைதான்சேர்த்து
பாங்குபெறவிளவறுப்பாய்வறுத்துக்கொண்டு
பதிவாகச்சூரணமேசெய்துமைந்தா
தீங்கில்லாப்பாகுதனிற்றூவித்தூவித்
திறமாகக்கிண்டிவிடுநன்றாய்மைந்தா
ஆங்கதிகொண்டேயிறங்கிப்போனாற்பின்னு
மப்பனேசர்க்கரையைச்சேர்த்துக்கிண்டே. (௮௧)

கிண்டியந்தலேகியத்தைப்பதனமாகக்
கிருபையுடன்பரணிதனிலடக்கம்பண்ணி
கொண்டதொருலேகியத்தில்பணவிடைத்தான்
குறிப்பாகத்தானெடுத்துவைத்துக்கொண்டு
அண்டர்பிரானருள்பெருகபுயத்தைப்போற்றி
யன்பாகப்பூசித்துலேகியத்தைமைந்தா
நின்றுடும்நாவினில்வைத்தமூர்தங்கொண்டு
நினைவாகரேசகபூரகமும்பண்ணே. (௮௨)

பண்ணப்பாகும்பகத்தில்வாசிபூட்டிப்
பத்திகொண்டுநின்றதனாற்பலிக்குஞ்சித்தி
விண்ணப்பாதான்றுலங்கிவிண்ணிலேதான்
விதமாகத்தீபவொளிகண்ணிற்காணும்
நண்ணப்பாவத்தீபந்தன்னைமைந்தா
நயமாகக்காயமதிலுறுதியாகும்
கண்ணப்பாகாணுடனேசெவ்வையானால்
கைலாயம்வைகுந்தங்காணலாமே.

(வல்லாரைகர்ப்பம்)

காணவேயின்னமொருகர்ப்பஞ்சொல்வேன்
கருவானவல்லாரையார்காண்பார்கள்
தோணவேவல்லாரைசொல்லக்கேளு
தொல்லுலகில்மற்றகருசொல்லப்போமோ
பேணவேகுருவருளால்சொல்வேனப்பா
பிண்டமடாவுமைத்தமுதலாறுமாதம்
பூணவேபக்கருவைவாங்குதற்குப்
பூரமுடன்வெல்லந்தைப்புணர்ந்துபாரே. (௮௪)

பாரப்பாபூரமுடன்வெல்லமொண்டும்
பக்குவமாயெருக்கம்பால்தன்னாலாட்டி
சீரப்பாகுன்றிமணியளவாய்ச்செய்து
திறமாகவொருவுண்டைமாதுக்கீய்ந்தால்
வீரப்பாசெய்யாமற்பிண்டந்தானும்
விதனமன்றிவிரும்பிமிகவருகுமப்பா
நீரப்பாவமுரிதனில்பூரம்போட்டு
நினைவாகவல்லாரையதனிற்போடே. (௮௫)

போட்டுநன்றாய்நீர்வற்றவெரிப்பாயப்பா
புகழாகநீர்வற்றியவித்துதென்றால்
தேட்டமுடனதையெடுத்துக்கலவத்திட்டுத்
திறமாகமைப்போலேயாட்டிக்கொண்டு
பூட்டுவாய்மிளகுடனேசாதிக்காயும்
பூவுடனேபத்திரியும்மேலுங்கூட்டி
ஆட்டுவாய்நெய்பாலேநன்றாய்மைந்தா
அரைத்தெடுத்துப்பரணிதனிலடக்கம்பண்ணே. (௮௬)

பண்ணப்பாபரணிதனிலடக்கம்பண்ணி
பக்குவமாய்மேல்மூடிச்சீலைசெய்து
நண்ணப்பாகுழிவெட்டிப்புதைத்துப்போடு
நல்மானமண்டலஞ்சென்றெடுத்துக்கொண்டு
திண்ணப்பாகுன்றிமணியளவிவ்விதம்
திறமாகமண்டலமேகொண்டாயானால்
[illegible]ப்பாநான்சொல்லப்போறேனையா
[illegible]சிவயோகத்தியல்புதானே. (௮௭)

[illegible]னொன்றித்தவத்தையறியவேண்டும்
[illegible]ள்ளபூரணத்தைக்காணவேண்டும்
ஊனொன்றமதியமுர்தங்கொள்ளவேண்டும்
[illegible]மையிலாச்சத்திசிவபூசைவேண்டும்

நானென்றவாணவத்தைநிறுத்தவேண்டும்
நாதாந்தப்பேரொளியைக்காணவேணும்
வீணென்றவெறும்பேச்சாய்த்திரியவேண்டாம்
வேதாந்தக்கர்ப்பமொன்றுசொல்லக்கேளே. (௮௰)

( கடுக்காய்லேகியம் )

சொல்லக்கேள்கடுக்காய்லேகியத்தைமைந்தா
சோதியென்றகடுக்காய்தானூர்காண்பார்கள்
விள்ளக்கேள்பொற்கடுக்காய்செனித்தநாளில்
விபரமுடன்மற்றகடுக்காயைவாங்கி
அள்ளக்கேளக்காயைத்தறித்துநல்ல
அப்புவினிற்றான்போட்டும்பிசைந்திறுத்தித்
கொள்ளக்கேள்நீரெல்லாம்பிழிந்துநல்லக்
கூர்மையுள்ளவெயில்தனிலேகாயப்போடே. (௮௧)

போட்டெடுத்துமறுபடியுமுராவிற்றாக்கிப்
பொடியாகத்தானிடித்துத்தண்ணீர்விட்டுத்
தாட்டிகமாய்த்தான்பிசைந்துயிறுத்துப்போடு
தன்மையுடன்முன்போலேகாயப்போட்டு
வாட்டியெடுபத்துமுறையிந்தவிதமாக
மார்க்கமொடுசெய்ததினால்வளமையாகும்
தேட்டமுடனின்னமொருசுத்திசொல்வோம்
சிவசிவாபழங்காடிதன்னைவாங்கே. (௮௨)

வாங்கிநன்றாய்முன்போலேகனத்திறுத்து
மைந்தனேநீர்வற்றக்காயப்போடு
ஏங்கியேதிரியாதேசம்பழத்தின்சாற்றி
லிறுக்கவேபிசைந்துருட்டிரவியிற்போடு
ஆங்கதுகொண்டேயெடுத்துப்பொடியதாக்கு
அப்பனேயிங்கானிலிட்டுக்கொண்டு
தீங்கில்லாப்பழச்சாறுபிழிந்துக்கொண்டு
செவ்வையாய்நிதானித்துவுப்புச்சேரே. (௮௩)

சேரப்பாவுப்புமிஞ்சிக்குறிப்பில்லாமற்
செவ்வையுடன்தானதைத்துயிறுத்துக்கொண்டு
வாரப்பாகடுக்காய்சூரணத்தில்மைந்தா
வரிசையுடன்சாறுவிட்டுப்பிசறிக்கொண்டு
நேரப்பாபதப்படுத்திநிழலில்வைத்து
நேர்மையுடன்பாணிதனிலடக்கம்பண்ணி
காரப்பாபொருத்தநாட்பார்த்துநீயும்
கருவானசூரணத்தில்பாணிவிடதான்கொள்ளே. (௮௪)

கொள்ளவேமண்டலத்திற்சீதம்போகுங்
கொண்டதொர்ருமலங்கள்நிதங்கழிந்துபோகும்
மெள்ளவேவாதநீர்பித்தநீரும்
மேலானசிலேத்துமத்தின்சீதக்கட்டும்
கள்ளவேவாங்கிவிடுக்கடுக்காய்கர்ப்பஞ்
சுகமாகக்கொண்டுவரநரைதிரைகள்மாறும்
விள்ளவேவேண்டாங்காண்தேகவச்சிரம்
மேலானவயதுசிறுவயதாம்பாரே. (௬௩)

பாரப்பாயித்தமுறையார்க்கென்றாலும்
பகராதேராமரிடவாக்கியந்தன்னை
காரப்பாமனதுறுதியாலேமைந்தா
கருவானநூலிருக்குதென்றுசொல்லி
வீரப்பாகொண்டுமேறிகெட்டுநீயும்
வீணருடன்வாய்சமர்த்தால்விளம்பினுக்கால்
நீரப்பாதான்பெருகிசிரசிலேறி
நின்றநிலைதப்பியுடலழிந்துபோமே. (௬௪)

உடலழிந்தபோனதினாலுனக்கேதுண்டு
உண்மையுடன்மவுனமதாயிருந்தாயாகில்
சடலமென்றவாக்கையதுநிலைக்குமப்பா
சண்டாளப்பயல்களுறவாகாதையா
படலறிந்துதிறக்கறிபாநாய்கள்போலப்
பாவிகள்தான்பொய்பேசிப்பரதவிப்பார்
குடலடுத்தகுணமறிந்துகர்ப்பங்கொண்டு
குருவானபதிநோக்கிக்குணமாய்நில்லே. (௬௫)

குணமானகாயாதிகர்ப்பந்தன்னைக்
கூறிந்துகொண்டுவரும்போதிலேதான்
மணமானபெண்ணொடுபுளியுமாகா
மாண்டிறந்தமீனுகாயிறச்சியாகா
கனமாகநாள்சொன்னவிந்தநாளுங்
காசினியோர்தானறிந்துதள்ளானாயிற்
பிணமாகிப்போய்விழுவானேயாவையா
பிலத்ததொருபுத்தியினாற்கண்டுதள்ளே. (௬௬)

தயிலம்.

தள்ளப்பாமற்றதெல்லாங்கொண்டுதேறு
தவமானசடத்திற்குவுறுதியாகும்
கொள்ளப்பாநதியிலமொன்றுசொல்லக்கேளு

கூர்மையுள்ளவண்டமடாபலம்பத்தாகும்
விள்ளக்கேள்சருகுபலமன்பதாகும்
விளம்பினதுரெண்டுமடாவாதிபந்தம்
அள்ளக்கேள்ரெண்டையுமேபொடியாய்ச்செய்து
அப்பனேபாண்டத்திலடைத்திடாயே. (௧௭)

அடைத்ததின்மேலமுரிவிட்டுக்களிபோற்கிண்டி
யரசாரவிதனிலேயுலர்த்திக்கொண்டு
திடத்துடனேகுழித்தயிலமிறக்கியேதான்
செவ்வையுடன்பாலிதனிலடக்கம்பண்ணி
படைத்தவொருவண்டமதைமுன்போற்சுத்திப்
பக்குவமாய்ச்செய்துகொண்டுமைந்தாகேளு
செடத்துடையசத்தியிடநாதமொன்று
செங்கமலமாலினிடநாதம்ரெண்டே. (௧௮)

ரெண்டுடனேயொன்றதனைச்சேர்த்துக்கொண்டு
நேராகஅமுரிவிட்டுக்கலவத்தாட்டி
விண்டுப்போல்வட்டதனைப்பிடித்துநன்றாய்
வெய்யில்தனிற்காயவைத்துச்சீலைசெய்து
அண்டர்பிரான்றனைத்தொழுதுப்புடத்தைப்போடு
அப்பனேபுடமாறியெடுத்துப்பாரு
மண்டலங்கள்மெய்க்கவேதான்வெளுத்துநீறி
மாசற்றபற்பமதாயிருக்குந்தானே. (௧௯)

தானென்றபற்மதையெடுத்துக்கொண்டு
தண்மையுள்ளபரணிதனிலடக்கம்பண்ணி
தேனென்றதயிலமதிற்பணவிடைதான்பற்பஞ்
செவ்வையுடன்றான்குழைத்துக்கொண்டாயாகில்
ஊனென்றதேகமதுவலுத்துநல்ல
வுறுதியுள்ளவாசியதுவசையாதப்பா
கோனென்றகுருவருளாலிந்தகற்பங்
கொண்டுசிவயோகமதிற்குதித்துநில்லே (௨௰)

நில்லென்றசிவயோகமார்க்கந்தன்னில்
நீமகனேமனதுறுதியாகநின்றால்
சொல்லென்றசொற்களெல்லாமந்திரந்தானாகுந்
துருவமுள்ளதேகமதுபிற்மமாகும்
வில்லென்றவிசைபோலேவாசிதானும்
வேதாந்தச்சுடரொளிமேல்மேவிநிற்கும்
மல்லென்றமல்பிடித்தாற்போலேவையா
வாசியதுதேகமதில்வலுக்குந்தானே.

தானப்பாசிவயோகஞ்செய்யும்போது
தன்மையுள்ளதுபமொன்றுசொல்லக்கேளு
பூணப்பாவண்டமதுபலந்தான்ரண்டு
புகழ்பெரியகஸ்தூரிமஞ்சள்தானும்
தேனப்பாமஞ்சிட்டிக்கதுவாயப்பட்டைத்
தேக்குடனேயகிற்கட்டைத்தேவதாரம்
நாணப்பாகிழங்குடனேகிளியூறல்பட்டை
நலமானசாதிக்காய்ராசனைகூட்டே. (௱௨)

கூட்டப்பாசரக்குவகைபதினொன்றுந்தான்
குணமாகக்கலவத்திற்றூளாய்ப்பண்ணி
மாட்டப்பாபசுவினெய்தன்னாலாட்டி
மைந்தனேயாட்டிவிடுமெழுகுபோலே
நாட்டப்பாசிறுபில்லையாகத்தட்டி
நல்மானகரகத்தில்வைத்துக்கொண்டு
தேட்டப்பாசிவயோகஞ்செய்யும்போது
திறமாகத்தணலிலொருபில்லைவையே. (௱௩)

வையப்பாதணலிலோர்பில்லைதன்னை
வைக்கயிலேபுகைமண்டிமேலேசாடும்
மெய்யப்பாசொல்லுகிறேம்புகைவாசமேறில்
மேன்மையுள்ளலகிரியடாவென்னசொல்வேன்
செய்யப்பாபில்லைதனைநெய்யிற்றோய்த்து
திறமானநெருப்பினிலேவைத்துக்காரு
பையப்பாவப்பகையினாலேமைந்தா
பரமகயிலாசவொளிபார்க்கலாமே. (௱௪)

ஆமப்பாபுகைதானுமெய்யிற்சாடி
யப்பனேசன்னிமுதல்வாதந்தீரும்
தாமப்பாபில்லிமுதல்சூனியங்கள்தீரும்
தருகாதகுட்டமெல்லாந்தவறுண்டேபோம்
போமப்பாசில்தோஷம்பொருமல்காந்தல்
பொல்லாதநெஞ்சடைப்புப்போகும்போகும்
நாமப்பாசொன்னபுகையார்க்குஞ்சொன்னால்
நல்யோகமார்க்கமதுநாடுத்தானே. (௱௫)

நாடிப்பாரிருவிகற்பசமாதியாக
தன்மையுடனவ்வழியேநடந்துக்கொண்டு
தேடிப்பார்சற்குருவைநன்றாய்த்தேடி
தேடியவர்வசனமதிற்றிறமாய்நின்று

கூடிப்பார்சுழிமுனையைநன்றாய்க்கூட்டிக்
குருவானபதிநோக்கிமூர்த்தங்கொண்டால்
வாடிப்போற்தேகமதுவாடாதையா
வரிசையுள்ளவுரிசையைநீமறந்திடாதே. (௱௬)

மறந்திடாவுரிசையென்னவென்றுகேட்டால்
மார்க்கமுடன்சொல்லுகிறேன்மகனேகேளு
கறந்ததொருகல்லுப்புநீருப்புத்தான்
கண்டுகொண்டுகெடிகைநிதங்கொண்டாயாகில்
இறந்திடாதேயிருக்குங்காயங்காய
மென்னசொல்வேன்மாயமென்றுலேகாந்தத்தில்
மறந்திடாதக்கினியையக்கினியிற்சேர்க்க
மாண்டவர்களில்லையடாவழலைச்சித்தே. (௱௭)

சித்தான்வழலையிடமார்க்கந்தன்னைச்
செவ்வையாய்ச்சொன்னனடாவாயிரத்தில்
முத்தானமுப்பதிலுஞ்சொன்னேனந்த
மூர்க்கமுள்ளவயித்தியத்தில்முறையாய்ச்சொன்னேன்
பத்தாசைகொண்டபலதிரட்டிற்றானும்
பக்குவங்கள்நன்றாகப்பதிவாய்ச்சொன்னேன்
வத்தாகபூரணத்தைமனதாய்க்கொண்டு
மார்க்கமுடன்சிவயோகமிருந்திட்டேனே. (௱௮)

சல்லுப்புச்சுண்ணம்.

இருந்திட்டபோதில்மனோன்மணிதான்வந்து
யேகாந்தவழலைமுறைநன்றாய்ச்சொன்னாள்
திருந்திட்டவழலையென்றுலார்தான்காண்பார்
சிவாயகுருவருளதினாற்செப்பக்கேளு
பொருந்திட்டபூவழலையண்டக்கூறு
பூரணமாய்நின்றதுவுங்கல்லுப்பாச்சு
கருந்திட்டமானதொருகல்லைவாங்கிக்
கருவானசுத்தசலந்தன்னிற்போடே. (௱௯)

போட்டடுப்பில்வைத்துநீயெரிக்கும்போது
புண்ணியனேநீர்வற்றியுப்புத்தானும்
தாட்டிகமாயூறலற்றுக்கட்டிப்போச்சு
தயவானகல்லுப்பைவாங்கிமைந்தா
நாட்டியதோர்வெடியுப்புச்சீனம்வொண்டு
நயமானகல்லுமேமூன்றுமொன்றாய்க்
கூட்டியேகலவத்திற்பொடித்துக்கொண்டு
குருவானபழச்சாறுவதனிற்றூக்கே. (௱௰)

தாக்கிநன்றாயரைத்துருட்டிவட்டுபண்ணிச்
சமத்தாகரவிதனிலேகாயப்போடு
தூக்கிநன்றாய்ச்சுண்டிடவேகணிரிட்டாக்கால்
சுகமாகமண்சீலைவலுவாய்ச்செய்து
வாக்குமனதுறுதியினாற்புடத்தைப்போடு
மைந்தனேபுடமாறியெடுத்துப்பாரு
நாக்குறுனிவெந்துவிடுஞ்சுன்னவேகம்
நாதாந்தக்கல்லுப்புச்சுன்னந்தானே. (௱௰௧)

சுன்னத்தொந்தம்.

சுன்னமதைத்தானெடுத்துவைத்துக்கொண்டு
கருக்கானரசமுடனேவங்கஞ்சேர்த்து
நன்னயமாயிதற்குநிகர்சுன்னங்கூட்டி
நாட்டிபனைகலவத்திற்பழச்சார்விட்டு
தன்மையுடன்மெழுகுபோலாட்டிப்பில்லை
தான்பிடித்துரவிதனிலேகாயப்போட்டு
உண்மையுடனோட்டில்வைத்துமண்சீலைசெய்து
வுத்தமனேபுடம்போடச்சுன்னமாச்சே. (௱௰௨)

ஆச்சப்பாசுன்னமதிற்சன்னஞ்சேர்த்து
அப்பனேவாய்நீராலரைத்துக்கொண்டு
பாச்சப்பாதுருசுதனக்கங்கிபூட்டிப்
பக்குவமாய்க்காயவைத்துவோடுமூடி
பூச்சப்பாமண்பூசிப்புடத்திற்போடு
பொருமிவெந்துதுருசதுவுஞ்சுன்னமாகும்
நீச்சப்பாவெகுநீச்சுதுருசுசுன்னம்
நிலைத்துதென்றால்வெகுகோடிவேதையாமே. (௱௰௩)

ஆமப்பாதுருசுநீறெடுத்துக்கொண்டு
அப்பனேநாலிலொன்றுவீரஞ்சேர்த்து
நாமப்பாசொல்லுகிறோம்வாய்நீர்தன்னால்
நன்றாகத்தானரைத்துவழித்துக்கொண்டு
தாமப்பாதாரத்திற்கவசஞ்செய்து
சமத்தாகரவிதனிலேகாயப்போடு
ஓமப்பாமண்சீலைவலுவாய்ச்செய்து
வுத்தமனேபுடம்போடநீறதாச்சே. (௱௰௪)

லோகவாதிகுணம்.

நீறுனதாளந்நீறதிசமப்பா
நீள்திசையில்வாதிகளோர்வறியப்போறார்

பாருனநீருலேயனந்தம்வேதை
பக்குவமாய்த்தானறிந்தோன்வனேவரதி
கூறுதேசிவயோகமிருக்குதென்று
குணமறியாநெஞ்சரிடங்கூறவேண்டாம்
பேராசைதான்பிடித்துப்பொய்யைப்பேசிப்
பிதற்றிநூல்தனைக்கேட்பான் பேயன்தானே. (௱௰௫)

தானென்றபேயர்கள்தான்மெத்தவுண்டு
தானறிந்துஅவர்களுடன் சேரவேண்டாம்
ஊனென்றவுறுதிதன்னையறியான்மட்டை
யொருசொல்லின்பயனறியானுறுதிகாணான்
தேனென்றவமுர்தமதையறிந்துகொள்ளான்
சிற்றின்பக்கூற்றறியால்தெருவிலேதான்
வீணென்றமாடுபோற் திரிவான்சண்டி
மேல்வரப்பு. கீழ்வரப்பு அறியான்றானே. (௱௰௬)

அறியாதலோபரைத்தானடுக்கவேண்டா
மவர்களிடம் நூல்முறைகள்பேசவேண்டாம்
விரிவானவிலாசமுதா யிருக்கும்போது
வீண்பயல்கள்வந்துவுறவாடிக்கொண்டு
நெரியானபொருளேது பயன்களேது
நிஷ்டைமுறைதனக்குறுதியானதேது
பரியானமரியமைத்தவாறங்கேது
பற்பவகைக்குறுதியென்னபகரென்பாரே. (௱௰௭)

பகரொன்றுகேழுக்கின்ற பசாசரைத்தான்
பக்குவமாய்த் தானகற்றி யறிவில்நில்லு
சிகரமென்றதீபவொளி தன்னைப்பாரு
சிவயோகநிஷ்டையிலே சென்றேநில்லு
அகரமென்றதேகமதிலாறுதார
மடுத்துநின்றநற்றிபடா மூலாதாரம்
நிகரில்லாமவுனமடாசிர்மபீடம்
நேர்மையுடன்பீடமதில் நேர்த்துநில்லே. (௱௰௮)

நேர்ந்துகொண்டதாரகத்தி- வீற்றைவாங்கி
நேர்மையுடன் அருகநீ ரொன்றாய்ச்சேர்த்துக்
கூர்ந்துநின்றுவெடியுப்புச்சுன்னந்தன்னைக்
கூட்டடாநாவிலொன்றுவாய்நீர்தன்னால்
ஆர்ந்துநன்றாய்க்கல்வமதிற் கூழ பபிக்கொண்டு
அப்பனையறை பொடிலய வெட்டிப் பிட்டுச்

சேர்ந்துநன்றாயொன்றாகக் குழப்பிக்கொண்டு
செவ்வையாய்க்குகைதனிலேயிட்டுமூடே (௱௰௯)
மூடிநன்றாய்மண்சீலை ஆவாய்ச்செய்து
மூர்க்கமுடன்குகைதனிலேயழுகலூது
வாடிதன்றாய்மாண்டிறந்து வுருகிநிற்கு
மைந்தனே அயத்தோர்டேநாகஞ்சேரு
தேடிநன்றாய்ப்பரியதுவுங்கூடச்சேரு
செவ்வையுடன்சேர்க்கவொன்றாய்த்திரண்டுபோகும்
கூடிநன்றாய்த்திரண்டுநின்றவுயக்களங்கைக்
கூர்மையுடன்றானெடுத்துவைத்துக்கொள்ளே. (௱௨௰)
கொள்ளப்பாவயக்களங்கைவைத்துக்கொண்டு
குருவானசர்க்குருவைத்தியானப்பண்ணி
நில்லப்பாம்திதனிலேபார்த்துக்கொண்டு
நீமகனேகொடுத்துருக்க மாற்றெட்டாகுஞ்
செல்லப்பா புடம்போடத் தங்கமாகும்
சிவயோகந்தனக்குறுதியானதங்கங்
கல்லப்பாகசிந்துருகி நின்றதங்கங்
கருவானவண்டமென்ற தங்கந்தானே. (௱௨௧)
தானென்றதங்கமட்டாபிர்மபீடம்
தனையறிந்து சிவயோகத்தன்மைபாரு
ஊனென்றவுடலுயிர்க்கு முதவியான
வுற்றசிவயோகமதையார்தான்பார்த்தார்
வேனென்றசெகந்தனிலேகோடிக்கொன்று
வேதாந்தஞ்சித்தாந்தமறிந்துநல்ல
தேனென்றவமுர்தமதைக்கண்டுகொண்டு
சிவயோகச்சிந்தையிலே யிருந்திட்டாரே. (௱௨௨)
இருந்திட்டபெரியோர்கள்மார்க்கந்தன்னை
யென்னசொல்வேனவர்களுடமனதுதன்னை
கறந்திட்டபால்போலே சுத்தமான
கருவானபிள்ளைகளைத்தேடிப்பார்த்து
வருந்திட்டமாகவே வசனஞ்சொல்லி
வாக்குமனமொன்றாக நிலையுகஞ்சொல்லி
சிறந்திட்டசிவயோகமவனுக்கீய்ந்து
செவ்வையுடன்குருவடியைத்தினமும்போற்றே. (௱௨௩)
போற்றென்றபுத்திமதி நன்றாய்ச்சொல்லிப்
போக்குவருத் தாகிநின்றநிலையுஞ்சொல்லி
நீற்றென்றநீற்றினத்தின்வகையுஞ்சொல்லி
நிலையானவர்தியத்தப் பொருளுஞ்சொல்லி

காற்றென்றமுட் டூவின்மறுமஞ்சொல்லி
    காயாதிகற்பத்தின்பேருஞ்சொல்லி
கூற்றென்றதிருநடனக் கூற்றுஞ்சொல்லிக்
    குணமானயிடமறிந்துமிகுவேபாரே. (௱௨௪)

பாரானபெரியோர்கள்மார்க்கஞ்சொன்னேன்
    பண்பறியாமூடரிட-வழியுஞ்சொன்னேன்
கூறுதகாயாதிகற்பஞ்சொன்னேன்
    குருவானபதிநிலையின்குணமுஞ்சொன்னேன்
மாறுதவாசியிடவழியுஞ்சொன்னேன்
    வாசிநின்றுதானிலங்கு மவுனஞ்சொன்னேன்
ஆறுதமவுனத்தின்மேலேநின்று
    அசைவில்லாத்தீபவொளியருள்சொன்னேனே (௱௨௫)

சொன்னதொரு சிவயோகமிருநூறப்பா
    சுருக்கமுள்ள நூலெனவே மனதிலெண்ணி
நன்னயமாயுதயாதி காலந்தன்னில்
    நன்றாகத்தேகசுத்தி நலமாய்ச்செய்து
அன்னைவெல்லாஞ்சற்குருவைத்தியானம்பண்ணி
    யன்பாகவிபூதிமெய்யிலணிந்துக்கொண்டு
வின்னமில்லாப்பிரமநிஷ்டைதனிலிருந்து
    விரும்பிநன்றாய்ரேசகபூரகமும்பண்ணே. (௱௨௬)

பூருவமையநிதானம்

பண்ணப்பாகும்பகத்திற் பதிவாய்நின்று
    பாக்கியமாஞ்சிவயோகங்கையில்வாங்கி
உண்ணப்பாமவுனமதா யிருநூறும்பாரு
    வுத்தமனேயதைத்தொடுத்தநாதம்பாரு
கண்ணப்பாதுலங்குவதுபோலேயிர்தக்
    கருவானசிவயோகக்கருக்கள்தோன்றும்
நண்ணப்பாவக்கருவைக் குறித்துக்கொண்டால்
    நல்லசிவயோகமதில்நண்ணலாமே. (௱௨௭)

ஆமப்பாசிவயோக மறியவேண்டும்
    மந்தாங்கமானகருக் காணவேண்டும்
காமப்பால்கானப்பால் கொள்ளவேண்டும்
    கைமுறையாய்ப் பூசைவிதிபண்ணவேண்டும்
வாமப்பால்கொண்டுமதியறியவேண்டும்
    வரிசையுள்ளவுரிசைதனைக்காணவேண்டும்
தாமப்பாதன்னிலையத்தானேகண்டு
    சங்கையுள்ளகொங்கையிலேஸ்தானம்பண்ணே. (௱௨௮)

கெங்கையென்றுலெங்கெயென்றுகேட்பாயாகிற்
கேசரத்திற்கேசரியாம்புருவமையம்
அங்கையடாசுழிமுனையிலஷ்டகெங்கை
யறுதினமுமவ்விடத்தே நாட்டமாக
சங்கையுடனின்றதிருவ்ஸ்தானமாகுந்
தன்மையுடன்பூசிக்கத்தரிசனமுமாகும்
மங்களமாய்மனதொருமையாகநின்றால்
மகத்தானசிவயோக வரிசைதானே. (௱௨௯)

வரிசையுள்ளபுருவமைய மெங்கேயென்று
வாய்திறந்துசொல்வதற்கு நாவோயில்லை
புருஷிருடன்மனதுரிமையாகநின்று
பொற்குருவாஞ்சற்குருவைப்போற்றிநின்றால்
குருஷிமுகமவனறிந்துசொல்வான்கேளு
குண்டலியாமூலகுருடு வோரந்தன்னில்
பருவமதாயங்கிவளர்ந்தெழுந்தவாவிப்
பற்றுதடாபுத்தியென்ற குகையிற்றானே. (௱௩௰)

தானென்றகுகையிலந்த ஆவிசென்று
தன்மையுடன்புத்தியிலேபற்றிநல்ல
கோனென்றபுத்திநல்ல தீபம்போலே
கொழுந்துவிட்டுயெரியுமடாகுணமாய்ப்பாரு
மானென்றவத்தீபவொளியிலேதான்
மயங்காமற்றியங்காமல் வரிசையாகத்
தேனென்றருசிபோலே சிவயோகத்தைச்
சிந்தைவைத்துக்கண்டவனேசிவயோகியாமே. (௱௩௧)

திலர்தம்.

ஆமப்பாசிவயோகத்திருக்கும்போது
அருளானதிலர்தவகையொன்றுகேளு
நாமப்பாசொல்லுகிறேன் மண்டத்தோடே
நலமானமாமஞ்சள் கஸ்தூரிமஞ்சள்
தாமப்பாசாதிக்காய்ச்சாதிபத்திரி
தாழம்பூத்தாளுடனேசந்தனமும்பூவுங்
காமப்பால்கல்மதமுங் கஸ்தூரிகோவுங்
களங்கமற்றபுழுகுடனேகர்ப்பூரங்கூட்டே. (௱௩௨)

கூட்டப்பாசரக்குவகை பதிமூன்றுந்தான்
குறிப்பாகவோரிடையாயெடுத்துக்கொண்டு
நாட்டப்பாகல்வமதிற்யொடித்துக்கொண்டு
நலமானபழச்சாறும் பன்னீர்வார்த்து

ஆட்டப்பாவடியிளகு போலேமைந்தா
 வரைக்கையிலேபுழுகிட்டுஅரைத்துநன்றாய்
நீட்டப்பாகயிரதும்பால் நீட்டிக்கொண்டு
 நிழலுலர்த்திப்பதனமதாய்வைத்துக்கொள்ளே. (௱௩௩)
கொள்ளுகிறவிதமென்ன வெல்லாயாகிற்
 குணமாகச் சிவயோகத் திருக்கும்போது
நல்லுருவாய்த்திலர்தமதையெடுத்துக்கொண்டு
 நாட்டப்பாகுருபதிமேற்றிலர்தம்போடச்
சொல்லுகிறமந்திரந்தானென்றுகேளு
 சுருக்கடாசுவாவென்று திலர்தம்போட்டு
உள்ளுறவாயிருதயத்தில் மனதைநாட்டி
 உம்மெனவேதம்பித்து வொடுங்கிநில்லே. (௱௩௪)
ஒடுங்கியந்தவொடுக்கமதி லொடுங்கிநில்லு
 வுலகத்திலுள்ளவர்க ளுன்னைக்கண்டாற்
படிந்துவுந்தன்பாதத்திற் பணிவாரையா
 பக்குவமாய்ப்பிணியாளர்பணிந்துகண்டால்
நீங்கிமிகப்பணிந்தோடும்பிணிகளெல்லாம்
 நலமானசிவயோகச்செந்தீப்பட்டு
மடிந்துவிடும்பிணிகளெல்லாமுலகிலுள்ளோர்
 மண்டிநிற்பாருன்சமூகங் கண்டிலாரே. (௱௩௫)

திலர்தமை.

கண்டபடியின்னமொரு கருவைக்கேளு
 கருவானதிலர்தமையொன்றுசொல்வோம்
விண்டபடியாரறிந்து செய்யப்போறார்
 மேலானவேதாந்தி செய்வானப்பா
அண்டமெனுங்கருவெடுத்துவைத்துக்கொண்டு
 அப்பனேயேரண்டத் தயிலத்தாலே
சுண்டவேகுழைத்துநல்ல ரவியிற்போடு
 தூசிசெத்தைவிழுவாமற் சுகமாய்க்காரே. (௱௩௬)
கார்த்துநன்றாய்ரவிதனிலே கிண்டிக்கிண்டி
 கனமாகநீர்வற்ற காயப்போட்டால்
பார்த்துநின்றரவியினிட வொளிதான்சென்று
 பங்கயத்தின்மைதனிலே பற்றும்பாரு
சேர்த்துநின்ற மையொளியின்பெருமைதன்னைச்
 செப்புகிறேன்மனோன்மணியிற்றிறத்தால்மைந்தா
சாற்றுகின்றமையெடுத்துச் சிமிளில்வைத்து
 சாதகமாய்மைக்குறிகள் புழுகுஞ்சேரே. (௱௩௭)

சேரப்பாபுழுகிட்டு மைவிளக்கிச்
செவ்வையாய்ச் சிவயோகத்திருக்கும்போது
நேரப்பாநின்றநிலை தவறுமற்றுன்
நேர்மையுடன் மையெடுத்துத்திலர்தம்போட்டு
காரப்பாவஞ்சனுதேவிபாதங்
கருத்துடனேமனதறிவாற் காத்தாயாகில்
ஊரப்பாவுள்ளபயி ருயிர்களெல்லா
முனதுவசமாகிவுனக்கடிமையாமே. (௱௩அ)

ஆமப்பாயிடக்காத்தில் மைப்பொட்டிட்டு
அலசயாமற் கூர்ந்துமையையன்பாய்ப்பார்த்தால்
போமப்பாவெகுதூரம்ஒளிதான்தோன்றும்
புதுமைவெகுவதிசயங்கள் கண்ணிற்காணுந்
தாமப்பாகண்டதொரு வதிசெயத்தைத்
தாரணியில்விள்ளாதே தனதாயார்க்கும்
நாமப்பாகண்டபடி யின்னதென்று
நாட்டினால்தாய்போலே யலைவார்பாரே. (௱௩௯)

பாரப்பாவலக்காத்தில்மைப்பொட்டிட்டு
பதிவாகக்கீழ்த்திசையைப் பரிவாய்ப்பாரு
நேரப்பாவதுதாழ்ந்து நிலைதான்றோன்று
நிதிகள்பல வதிசெயங்கள் நிசமாய்க்காணுந்
தேரப்பாமனந்தேறி யகலதில்லு
சிவசிவாசிவயோகத் திறந்தானென்று
ஊரப்பாவறியாமல் மையைநீயும்
வுண்மையுடன்பதனமதாய் வைத்துக்காரே, (௱௪௰)

காரடாமூலமதில்அங்கென்றேதிக்
கைம்முறையாய்ச் சத்திசிவமொன்றாய்ச்சேர்த்து
சேரடாகம்பியுப்புப் பூரம்ரெண்டும்
செவ்வையுடன் துக்குநிகர்சேர்த்துக்கொண்டு
வாரடாகல்வமதில் நன்றாயாட்டி
வழித்துவொருமூக்கானில் வளமாய்ச்சேர்த்து
நேரடாவிதனிலே காயப்போடு,
நிசமானநந்தியென்ற வுப்பதாச்சே, (௱௪௧)

நந்தியுப்புக்குரு,

உப்பானநந்தியுப்புப் பலந்தானொன்று
ஒருமையுள்ள வளைப்பொடியும்பலந்தானொன்று
அப்பானபொடியதுவும்பலந்தானொன்று
அருமையுள்ளதாளகமும் பலந்தானொன்று

வைப்பானகாசியிடகட்டிதானும்
　　மார்க்கமுடன்பலமறைதான்வளமாய்ச்சேர்த்துத்
தப்பாமல்நாகரச மொன்றாய்க்கூட்டித்
　　தன்மைபெறவொருபலந்தானெடுத்துக்கொள்ளே, (௱௪௨)
கொள்ளப்பாவாறுவகைச் சரக்கைநன்றாய்க்
　　குருபாதத்தொழுதுமிகக்கலவத்திட்டு
மெள்ளப்பாதான்பொடித்துப்பழச்சாற்விட்டு
　　மேன்மைபெறமெழுகதுபோலாட்டிமைந்தா
நள்ளப்பாவுருட்டியதைவட்டுபண்ணி
　　நலமாகவோடதனில்நடுவேவைத்து
செள்ளப்பாசெப்பகலால் நன்றாய்மூடித்
　　தீர்க்கமுடன்கொழிமணலையதின்மேற்கொட்டே, (௱௪௩)
கொட்டுவதுகுருசொன்ன உள்வாய்க்கொட்டி
　　கூர்மையுடனடுப்பேற்றித் தீயைமூட்டித்
திட்டமுடன்தீயெரித்துவருகும்போது
　　சிவசிவாபதமென்னவென்பாயாகில்
வட்டமுள்ளமணல்மேலே கருகிற்றானால்
　　மைந்தனேபதஞ்சரியென்றெடுத்துமெள்ள
சட்டமுடனாறவைப்பாய்க்குளிருமட்டுந்
　　தன்மையுடன்குளிர்ந்ததின்மேல்தயவாய்க்கேளே (௱௪௪)
கேளப்பாமணலைமெள்ளவாரிப்பின்பு
　　கிருபையுள்ளகிண்ணமதைத்திறந்துப்பாரு
வேளப்பாயெரித்தநெற்றிக்கண்ணாலந்த
　　விதமானசரக்காறுங்கட்டிப்போகும்
கோளப்பாசொல்லாமல்வைத்துக்கொண்டு
　　குருவானதிருவடியைத்தொழுதுபோற்றி
வாளப்பாகுகைதனிலேசெம்புருக்கி
　　வரிசையுடனதக்குவலாமருந்துசேரே. (௱௪௫)

செம்புசுத்தி.

சேர்ப்பதுதான்செம்புருகிநிற்கும்போது
　　செவ்வையுடன்டாருத்தெடுத்துச்சிருகலவயா
கோர்ப்பதுபோற்கொஞ்சகொஞ்சமாகச்சேர்த்துக்
　　குண்மாகச்சரியாகச்சேர்த்துக்கிண்டி
வார்ப்பதுதான்பூமியிலேவார்த்தாயாகில்
　　மகத்தானசெம்பதுவுஞ்சுத்தியாச்சு
கார்ப்பதுதான்செம்புசுத்திப்பதனம்பண்ணிக்
　　கருவானவெள்ளியிலேபத்துக்கொன்றே, (௱௪௬)

ஒன்றான வெள்ளியிலே பத்துக்கொன்று
வுருக்குமுகந்தன்னில் நீகொடுத்துப்பாரு
நன்றான மாற்றதுவுமுவைத்தாகி
நாற்றமுள்ள செம்புதனிலே மழைாயுமாகும்
குன்றுதங்கமதிற்பத்துக்கொன்று
கொடுத்துருக்கித்தகடடித்துப் புடத்தைப்போடு
நின்றிடும்பாருஞ்சோதியான சோதி
நேர்மையுள்ள சோதியடாதங்கந்தானே. (௱சஎ)

லிங்கரு.

தானென்றதளவாயுருஞ்சாதிலிங்கந்
தன்மையுடனதுவிபாஞ்சாற்றக்கேளு
தேனென்ற கலவத்திற்பழச்சாற்விட்டுத்
திறமாகவரைத்துநன்றாய்வட்டுபண்ணி
கோனென்ற குருபதத்தைப்போற்றி நன்றாய்
குவலயத்தில் துஷ்டர்களையகலத்தள்ளி
மானென்றமண்மறைவிற்புடத்தைப்போடு
மார்க்கமுடன் சரக்கைந்துங்கட்டிப்போமே. (௱சஅ)

கட்டிநின்றமருந்திடைக்குச்செம்புருக்கிக்
கைம்முறையாய்மருந்ததனைச்செய்துக்கொண்டு
திட்டமுடன் தண்ணீர்போலுருக்கிச்சாய்த்துச்
செவ்வையுடன் செம்புதனையெடுத்துப்பாரு
சட்டமதாய்ச்செம்பதுவுங்கட்டிப்போகுந்
தன்மையுடன் வெள்ளிதனிற்பத்துக்கொன்று
இட்டமுடன் கொடுத்துருக்கிமாற்றைப்பாரு
என்னசொல்வேன்பதினாறுவயதுதானே, (௱சகூ)

தானான வேதைமுறைசொன்னமார்க்கந்
தன்மையுள்ளயோகத்துக்குறுதியாகுங்
கோனான குருவருளால்சொன்னதல்லாற்
குறும்பான திருடனுக்கோ சொன்னேனையா
மானான மவுனமுள்ள சிவயோகிக்கு
மனதரிமையாகவென்றுவாழ்த்தினேன்யான்
தேனான மதியமுர்தங்கொண்டுநல்ல
சிவயோகமார்க்கத்திற்சேர்ந்துநில்லே. (௱ரு௰)

நிஷ்டைமுறை.

நில்லென்றநிலையறிந்துநிஷ்டைகூடி
நில்களமாம்பிர்மமதில்வாசிபூட்டிச்

சொல்லொன்றுந்தவறாமல்மதியைப்பார்த்துக்
துலக்குமதிரவிதனிலேமதியைப்பார்த்துத்
கொல்லென்றரவிதனிலேவுரிமையாகக்
கூறுபஞ்சலக்கினியைக்கொளுத்திப்பாரு
சில்லென்றுமதியமுர்தம்வாரியாயுஞ்
சிவசிவாவந்தமுர்தங்கொண்டுதேறே. (௱௫௧)

தேறுவதால்தேகவச்சிரகாயமாகுஞ்
சித்தாதிசித்தனென்றபேருமாகும்
கார்புருவக்கருணைவிழிக்கமலமீதிற்
கருவானபருதிமதிச்சுடருக்கப்பால்
பார்புனலாம்நெருப்பாறுக்கப்பால்நாதம்
பதிவானநாதமதைப்பார்க்கவேண்டிக்
கூரமுதமதிபெருகுநாதத்தோடே
கொண்டுடம்நின்றநிலைகூர்ந்துபாரே. (௱௫[redacted]

சந்திரசூரியன்.

கூர்ந்துபார்சூரியனேசத்திசத்தி
கொழுகின்றசந்திரனேசிவமதாகும்
தேர்ந்துபாரிவர்களிடந்தானங்கேளு
சிவப்பானசூரியகலைபனிரெண்டாகும்
ஆர்ந்துபார்சந்திரகலைபதினாறாகும்
அதிகமுள்ளசந்திரனும்வாண்மைமிஞ்சிச்
சேர்ந்துசுடர்சத்திகலைபனிரெண்டோடே
சிவசிவாசிவகலையுஞ்சேர்ந்தவாறே. (௱௫௩)

சேர்ந்துமிச்சம்நாலுகலைபூரணமாய்நின்று
செவ்வையுடனுமிலொன்றுஅமபாதத்தின்பதியாய்
நேர்ந்துமிகப்போனதின்பின்மூன்றுகலைதானும்
நெடுவானில்விந்துவெனவிளம்பிறையுமாகத்
கூர்ந்துபார்சத்தியிடந்திருவாசியாகிக்
கொழுகின்றசதுர்தேசியாகிப்பின்னும்
ஆர்ந்துநின்றவமாவாசைப்பருவமாகி
யந்தமொன்றுயிதுமூன்றுமொன்றாய்ப்போச்சே. ( )

ஒன்றாகச்சதுர்த்தியிலேவளர்பிறையாய்நின்று
யுகமுடிந்துவளர்ந்ததடாபதினாறாகக்
கண்டாயோமதிநிறைந்துகுறைந்தசெய்தி
கருவாகவுனதிடத்திற்காட்டிவைப்போம்
பண்டானவகாரமடாவிந்துவிந்து
பதிவானவுகாரமடாசத்திசத்தி

நின்றுமகாரமடாசுழினைக்கம்பம்
நேர்மையுடனதுமூன்றுந்தேகமாச்சே. (௱௬௫)

தேகமென்றால்வெகுதூரநினைக்கவேண்டாம்
சேர்ந்துநின்றவாதபித்தஞ்சிலேற்பமாகும்
ஆகமுடனதுமூன்றுமிடைபின்னாக
வமர்ந்துநின்றசுழிமுனையாய்நின்றவாறும்
பாகமென்றசூரியன்றான்வாதமாச்சு
பதிவானசந்திரன்றான்பித்தமாச்சு
தாகமுடன்சேர்த்தமர்ந்தால்சுழியாய்நின்று
சகலசெந்துமூன்றிலுமடிந்தவாறே. (௱௬௬)

மடிந்தவகையேதென்வேயென்பாயாகில்
மக்களேயவனவன்செய்மார்க்கத்தாலே
முடிந்தவகைநன்மார்க்கம்விட்டகுறைமார்க்க
மூர்க்கமுள்ளதுன்மார்க்கத்தாலேலமர்ந்தா
கடிந்துநின்றயிடையானபித்தமீறிக்
கபாலமென்றசுழினையிலேறுதாக்கிச்
சொடிந்துவந்தவாதமதைத்துஞ்சப்பண்ணி
தொல்லுலகிற்பிறந்திறந்துபோவார்காணே. (௱௬௭)

பிறந்திறந்துபோகாதநெறியைச்சொல்வேன்
பெருமைவிட்டுவுரிமையிலேபிலமாய்நின்று
கறந்துநிறன்வகாரமடாவிந்துவிந்து
கருவானவிந்துவட்டாமதியுமாச்சு
சிறந்துநின்றமதியமெல்லவுகாரமான
தேகமென்றசூரியனிற்சேர்ந்துகொண்டு
மறந்துவிடாதேமகனேமகாரமான
மகத்தானபராபரத்தில்மகிழ்ந்துநில்லே. (௱௬௮)

இராப்பகல்.

நில்லென்றநிலைபறிந்துநிலையில்நின்று
நிலையில்லாச்சந்திரனைநிலையிற்சேரச்
சொல்லொன்றுந்தவறாதசொர்க்கமாகுஞ்
சோர்வானநாதமதுயென்னவென்றால்
உல்லென்றரவிதானேசொர்க்கஞ்சொர்க்கம்
லூன்றிநின்றசந்திரன்றானாதமாச்சு
செல்லென்றரவிமதிதானேதோவென்றால்
சேர்ந்துநின்றராப்பகலாய்நின்றவாறே. (௱௬௯)

வாறானராப்பகல்தானென்சொல்லென்றால்
[illegible]ரிதோன்றச்சொல்வேன்கேளு

காறுணராவதுதால்கண்மூடல்ப்பா
　கருவானபகலதுதான்பார்வைமைந்தா
கூறுகரெண்டுமொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு
　குருவானபதிதலத்திற்கூட்டிமேலை
நேராகநின்றுதவயோகஞ்செய்தால்
　நிலையானசிவயோகமதுதான்பாரே, (௱௬௧)

நாதவிந்துமெழுகு.

பார்க்கையிலேமூலமதிலக்கினியுண்டாகப்
　பதிவானகர்ப்பமொன்றுசொல்லக்கேளு
சேர்க்கையுடன்அகாரமுடன்உகாரம்ரெண்டுஞ்
　செவ்வையுடன்ரெண்டுமொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு
ஆர்க்குமிதுதெரியாமல்ரவியில்வைக்க
　அப்பனேநாதவிந்துவொன்றாய்ச்சேர்த்து
மார்க்கமுள்ளமெழுகாகுமைந்தாமைந்தா
　மனமகிழ்ந்துபணிவிடைதான்மகிழ்ந்துகொள்ளே.
கொள்ளயிலேசந்திரன்றான்தேய்ந்துத்தேய்ந்து
　கூர்மையுடன்ரவிதானும்பிரகாசமாகி
சுள்ளையிலேயகப்பட்டபாண்டம்போலே
　சுகமானதத்துவங்கள்செந்தீய்ப்பட்டு
தொல்லையென்றசூழ்வினைகளகன்றுபோகுந்
　துருவமென்றவத்துருவந்துலக்கமாகும்
பிள்ளையிலேவுங்களைப்போற்பிள்ளையுண்டோ
　பின்னுணரவியினிடபிலச்சைப்பாரே. (௱௬௨)

பிலமானகாயாதிகர்ப்பங்கொண்டு
　பேணியேயில்விடத்தைப்பிலக்கப்பண்ணி
குலமானமூலமுதலாறுதாரங்
　கூட்டிநின்றநவக்கிரகமொன்பதிற்கும்
நிலமாகவநுக்கிரகமார்தான்காண்பார்
　நீள்திசையில்சற்குருவைத்தேடிநின்று
நலமாகநாலஞ்சுவீட்டுக்கெல்லாம்
　நடுவீடாய்நின்றவநுக்கிரகந்தானே. (௱௬௩)
தானென்றவநுக்கிரகஞ்சுத்தப்பாழாய்த்
　தவறுதபாழ்வீட்டையென்னசொல்வேன்
கோனென்றகுருவருளால்வீட்டைநம்பிக்
　கோடானகோடிசித்தர்தவமேசெய்தார்
ஏனென்றாலவ்வீட்டிற்குறிதானென்று
　யென்னவென்றால்தூண்டாததீபந்தீபம்

வானென்றவத்தீபம்பார்க்கவேண்டி
 மகத்தானசத்திசிவபூசைசெய்யே. (௱௬௪)

பூசையென்றசிவபூசைசத்திபூசை
 பருஷிருடன்செய்வதற்குயோகந்தங்கு
நேசமுடனப்பூசைமனதிலெண்ணி
 நிச்சயமாய்க்குருவருளைநேர்ந்துகொண்டு
ஆசையென்றபலருசியையகலத்தள்ளி
 யருந்துருசிதனையறிந்துமருந்துவோர்க்கு
மாசியென்றமயக்கமறுமனமேதங்கு
 மகத்தானவாசியில்சென்றேறுவானே. (௱௬௫)

ஏறுவால்வாசியிற்சென்றேறியந்த
 யிருட்டானபதிகடந்துவெளியிற்சென்று
தேறுவான்மனந்தேறியமூர்தங்கொண்டு
 சிந்தைமனதொன்றாகித்தீபம்நோக்கிக்
கூறுவான்துராதிஷ்டிநடத்தையெல்லாங்
 குருவானபராபரத்தின்குறிப்பினாலே
ஆறுவான்வக்கிரகமருளைப்பெற்று
 அன்பானவநுக்கிரகமாதிதானே. (௱௬௬)

ஆதியென்றவநுக்கிரகம்பிர்மபீடம்
 அப்பனேசுழிமுனையாய்நின்றபீடம்
சோதியென்றசுடர்வடிவாயிருந்தபீடந்
 துடர்ந்துநின்றசீடனுக்குக்குருவானபீடம்
வாதியென்றவந்தகிரிதீபபீடம்
 மனோன்மணியாள்சென்றுவிளையாடுபீடம்
கோதிலாச்சுத்தமயமானபீடங்
 கூர்மையுள்ளபீடமடாநந்திதானே. (௱௬௭)

நந்தியொளிகண்டவர்தான்ஞானயோகி
 நலமானசிவயோகிபிர்மயோகி
அந்தமுள்ளவஷ்டாங்கமானயோகி
 யருவுருவாய்நின்றதொருபரமயோகி
பந்தமுள்ளவாசிநிலையறிந்தயோகி
 பதிவானகாயாதிகர்ப்பயோகி
கெந்தருவரானகேசரத்தில்வாழுங்
 கெவுனமென்றகெவுனசித்தியோகிதானே, (௱௬௮)

தானென்றயோகத்துக்குறுதியென்ன
 தன்மையுள்ளவாசியென்றமூலமூலங்

கோனென்றகுருவருளால்வாசிமூலக்
குறிப்பறிந்துகொள்ளுவதுமென்னவென்றால்
நானென்றவாணவத்தைநலமாய்த்தள்ளி
நடுவானபூரணத்தைப்பற்றிக்கொண்டு
மானென்றபிரணவத்துள்மனதைவைத்து
மகத்தானகேசரியைத்தொழுதுநில்லே. (௫௬௯)
தொழுதமுறையென்னவென்றாலகாரதிட்டை
சுருக்கமுள்ளவுகாரமடாசத்திபூசை
ப்ழுதொன்றுநினையாமலிரண்டுமொன்றாய்ப்
பக்குவமாய்த்தான்செபித்துப்பதியில்நின்று
நெளிதமுள்ளமனதுறுதியாகிவந்த
ரேசகமும்பூரகமும்நேரேசெய்து
முளிதமர்க்குள்நிறுத்திக்கும்பகத்தில்நின்று
முனையானதீபமதைத்தூண்டிப்பாரே. (௫௭௰)

லிங்கந்தாரகுரு.

தூண்டிமிகப்பார்க்கையிலேசோதிகாணுந்
துவாதிசாந்தத்தில்மனதுறுதியாகும்
தாண்டிமிகப்போகாமலறிவில்நின்றால்
சகலகலைக்கியானமெல்லாந்தானேதானாய்
வேண்டியதோர்கருமானமின்னமொன்று
வெகுதெளிவாய்ச்சொல்லுகிறேன்மெய்யதாகப்
பூண்டமனதுறுதியினாலிங்கந்தாரம்
புகழானவிந்துவுடன்கெந்திபூட்டே. (௫௭௧)
பூட்டப்பாகெந்தியுடன்றுருசுதானும்
பொருந்தவசுமோரிடையாய்நிறுத்துக்கொண்டு
நாட்டப்பாவதற்கிடைதானுதிசேர்த்து
நன்றானபழச்சாற்றால்கலவத்தாட்டு
ஆட்டப்பாயீராறுசாமமாட்டி
அரசாவழித்துருட்டிவட்டுப்பண்ணி
மூட்டப்பாசட்டிதனில்வைத்துமூடி
மூடுவதுமணற்கொட்டியெரித்திடாயே. (௫௭௨)
எரித்துமணல்கருகுமப்போயிறக்கிவைத்து
இதமாகவாறினபின்திறந்துபாரு
குறித்தசரக்காறுமொன்றாய்க்கட்டிப்போகும்
குருவாகமனந்தனிலேகூர்ந்துகொண்டு
வருத்தமிட்டுச்செம்புருக்கியதற்குநேராய்
மார்க்கமுடன்மருந்தீவாய்கிண்டிக்கிண்டி

திருத்தமுடன்மருந்தீய்ந்துநன்றாயூதிச்
செம்புகளிம்பானதுவுங்கட்டிப்போச்சே, (௱௭௩)
கட்டிநின்றசெம்பதனைப்பதனம்பண்ணிக்
கருவாகவிடைக்கிடையேதங்கஞ்சேர்த்து
திட்டமுடன்வெள்ளிதனிற்பத்துக்கொன்று
செவ்வையுடன்றானுருக்கியெடுத்துப்பாரு
வட்டமிட்டரவியொளியையென்னசொல்வேன்
மாற்கமுடனவ்வொளியைக்கண்டுநீயுந்
துட்டருடன்கூடாமல்விண்ணைநோக்கித்
துவாதசாந்தத்தில்மனந்துலங்கிநில்லே, (௱௭௪)
நில்லென்றநிலையறிந்துமனதுபூண்டு
நிலையானமூல்முதலாறாதாரம்
உள்ளென்றவுள்மூலமேலாதாரம்
ஒடுங்கிநின்றதத்துவமாந்தொண்ணூற்றாறுந்
தள்ளந்தட்பதிதனிலேநிறுத்தியந்தத்
தள்ளாலேயாகுதியாய்ச்சாம்பலாக்கிக்
கொள்ளுகிறவிதமென்னவுத்தளமாய்ப்பூசிக்
குண்டலியிலந்தியொளிகூர்ந்துபாரே, (௱௭௫)

ஞானம்,

பாரப்பாரவிமதியுமொன்றாய்க்கூட்டிப்
பருவமுடன்புருவநடுப்பதிக்கப்பாலே
நேரப்பாவதனிலொருகமலந்தோற்றும்
நின்றிலங்குங்கமலமதைநேரேபார்த்தால்
ஆரப்பாவறிவார்கள்ஞானதீபம்
அரகராசிவயோகமானதீபம்
மேரப்பாமெய்ஞ்ஞானதீபந்தன்னை
மெய்யாகக்கண்டுசிவயோகம்பாரே, (௱௭௬)
பாரப்பாமனதுகொண்டுஅறிவிற்சென்று
பரிவானமூலமடாமூலாதாரம்
தேரப்பாநின்றதொருவாறாதாரம்
நிலையானநடுமையமேலாதாரம்
வீரப்பாகொண்டவரிதாரந்தாரம்
மெய்யானதாரமடாவிஞ்சைவிஞ்சை
கூரப்பாகுருவானவிஞ்சைமூலங்
கூர்மையுடனம்மூலங்குறியாய்க்காணே, (௱௭௭)
குறியாகக்கண்டதக்குறியில்நின்று
கூர்மையுள்ளதாரமதையெடுத்துமைந்தா

அறிவதுவெட்டு விரல்பிராணத்திருத்தி
சகியமாய் [illegible] நின்றும்
நெறியிலடங் [illegible] நிலைநிறுத்தி நோய்
நீங்க [illegible] யதற்குட்சேர்த்து
நெறியைக் [illegible] அறுப்பிசதிகொண்டு
நிவர்த்தி [illegible] போற்றியெரித்திடாயே. (௩௭௮)

எரித்தபமாகவே [illegible] விருக்கிலமைத்தா
[illegible] கவிசவத்துமறுநாள்தானும்
இருத்துமுடன் [illegible] பாவேடாத்து முறைசெய்தால்
இவிவாத [illegible] நீங்கும்
வருத்தமென்று [illegible] பாமல்ரவியிற்போட்டு
மார்க்கமுடன் [illegible] ணர்ந்து சுக்குலம்போல்
கருத்துடனே [illegible] யெடுத்தால்
சக்திறலி [illegible] விழுத்திடாயே. (௩௭௯)

இழுத்திடுவார் [illegible] பதைப்பொடியதாக்கி
இன்பமுடன் [illegible] பாலேடாண்டத்திட்டு
வழுத்தமொடு [illegible] வற்றுவளைதான் பூர
மாட்டுநற்றுசெயல் [illegible] க்கிலமைத்தாலடர்ந்த
தொடுத்ததொன்றுபாண்டமதை மூடிமைந்தா
சுகமாகம [illegible] ஞ்சமாதிவைத்து
நடுத்தாமா [illegible] திபாகக்கொண்டு
நடுவான [illegible] தைத்தொழுதிடாயே. (௩௮௰)

தொழுதிடுவாய் [illegible] நிழுந்திக் குருவைத்தாளுந்
தொழுதுமீ [illegible] காரமென்ற சிலைத்தைப்பூசிப்
பழுதொன்று [illegible] யாமல் சத்திதன்னைப்
பாலகனே மன [illegible] நியாலேபூசி
நெறிதமுள்ள [illegible] பூசைபண்ணி
நீமகனே [illegible] நன்றாய்ச்செய்து
வழிதவறா [illegible] சமாதிசென்று
மார்க்கமுட [illegible] தையெடுத்திடாயே. (௩௮௧)

எடுத்ததொரு பாண்டமதை மைந்தா நீயும்
எழுட்டுறா [illegible] ரவியிற்போடு
தொடுத்ததொரு [illegible] சந்தன்னி நீயும்
சுகமாகவரி [illegible] மைந்தா
விடுத்து [illegible] சேர்த்து
மெய்யாக [illegible] பூசைபண்ணு

அடுத்ததொருபூசையென்னவென்றான்மைந்தா
   வாதியென்றநவகோணமிட்டுப்பாரே. (௱அ௨.)
பாரப்பாநவகோணமிட்டுக்கொண்டு
   பரமானமேருவதைநடுவேவைத்து
சாரப்பாசுகந்தமலர்போர்பதத்தால்
   சனிவாகவர்ச்சனைகள்கருத்தாய்ச்செய்து
தேர்ப்பாவயிரவர்க்குவடமாலைசாற்றிச்
   சிவசிவாதீபமொடு தூபங்காட்டி
நேரப்பாநின்றபரமேருதன்னில்
   நிலையானவமுதரசக்கடுகுவாங்கே. (௱அ௩)
வாங்கிடுவாய்கடுகில்நல்லகடுகுபோலே
   மைந்தனேதானெடுத்துநாவுதன்னில்
பாங்குபெறவைத்திதின்மேலங்கென்றேதான்
   பதிவாகக்கண்டமதிலங்கென்றானு
சாங்கமுடனமுதரசந்தானேபொங்குந்
   தன்மையுடன்தான்புசித்துத்தனதாய்மைந்தா
ஆங்கதிகொண்டநதின்மும்வாசிநோக்கு
   அருளானவாசியினாற்றீபநோக்கே, (௱அ௪)

பூரணலேகியம்

நோக்குவதற்கின்னமொருவுறுதிகேளு
   நுண்மையுள்ளபூரணலேகியந்தான்மைந்தா
வாக்குடனதுறுதியடாமகத்தாம்போத
   மனதுநெறியறிவானவாமபோதம்
ஏர்க்கையுள்ளபோதமதையென்னசொல்வேன்
   ஏகாந்தலேகியத்தினியல்புகேளே
சேர்க்கையுள்ளசெங்கமலத்தமூர்தம்வாங்கிச்
   சிவசிவாமீங்காணிற்சேர்த்துக்கொள்ளே. (௱அ௫)
சேர்த்ததொருபூரணத்திற்பூரஞ்சேர்த்துச்
   சிவசிவாமிடைசரியாய்ச்சேர்த்துமைந்தா
பார்த்திபனேரெண்டுமொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு
   பதிவாகரவிதனிலேவைத்துக்காரு
பூர்த்தமலரமுதரசம்பூரமிரண்டும்
   பொருந்தியொன்றாய்க்கட்டியதுபுட்டுப்போலாம்
கார்த்திருந்தரவிதனிலேநவநாள்போடு
   காரணமாயந்திடைக்குப்பூரஞ்சேரே. (௱அ௬)
பூரமதுநடைசரியாய்ச்சேர்த்துக்கொண்டு
   புத்தியுடன்கர்வமதில்நன்றாயாட்டிக்

காரமென்றலேகிடத்தையுருட்டிமைந்தா
கனமானபிங்கலைதன் மேருக்கேற்றி
வீரமென்றபூரணமேயென்றுபோற்றி
விபரமுடனவரோனைநடுவில்வைத்து
தாரமுடன்சார்க்குருவைத்தியானம்பண்ணிச்
சமரசமாய்க்கேளவுயெடுத்திடாயே. (௯௭)

எடுத்தநடுப்பூரணத்தைத்தொழுதமைந்தா
யிதமாகமண்டலமேகொண்டாயானால்
அடுத்தமனையாறுமடாவலுத்துப்போகும்
அசைவானவாசியதுவ[illegible]ந்துநிற்கும்
தொடுத்ததொருதேகமடாவச்சிரகாயஞ்
சுந்தரம்போல்பன்மதனைத்துலங்குவாய்நீ
நடுத்தரமாய்ப்பூரணத்திலிருந்துகொண்டு
நாதாந்தச்சிவயோகம்நண்ணுவாயே. (௯௮)

நண்ணுவதுபூரணத்தைநம்பவேண்டும்
நாதாந்தப்பேரொளியைநாடவேண்டும்
உண்ணுவதுசத்திசிவபூசைவேண்டும்
ஒடுக்கமந்தநிலைதனிலேயுறுதிவேணும்
எண்ணுமந்தப்படியாகயிருக்கவேண்டும்
ஏகாந்தச்சிவயோகவியல்புவேண்டும்
விண்ணதனைமெய்யாகநம்பிக்கொண்டு
மேலானசிவயோகம்விரும்பிநில்லே. (௯௯)

முப்பூச்சுன்னம்.

நில்லந்தநிலைதனிலேநிலைத்தால்மைந்தா
நீடூழிகாலமடாநிலைக்குந்தேகம்
கல்லென்றகல்லுதனைக்கருத்தாய்நீயும்
கருவானவுப்பதனைவாங்கிமைந்தா
உவ்வென்றவக்கினியிற்சுத்திபண்ணி
ஓர்நிறையாய்வெடியினம்நன்றாய்ச்சேர்த்துச்
செல்லென்றதன்னிரோலரைத்துமைந்தா
திறமாகவரைத்ததனைவட்டுப்பண்ணே. (௱)

பண்ணியந்தவட்டதற்குக்கவசம்பண்ணி
பரவாகரவியிலிட்டுப்புடத்திற்போடு
தன்மையாய்ப்புடமாறியெடுத்தபின்பு
தனதாகவஞ்சுமுலாமுமுன்போற்செய்தால்

உன்னியதோர்காரமதையென்னசொல்வேன்
வுகமையில்லாச்சுன்னமடாவேகமெத்த
விண்ணிறைந்தசுன்னமடாவேகமெத்த
வேதாந்தச்சிவயோகம்விளங்குந்தானே. (௱௧௧)

ஞானசுன்னமதில்வேதைகோடி
தயங்காதபற்பமடாகோடிகோடி
பூணைதக்கட்டினமுமுறுக்கினங்கோடி
பூரணமாய்ச்செயநீரின்புதுமைகோடி
கோணைகுருமுறைகள்கோடாகோடி
கூறுகிறகர்ப்பமுன்றகுணமோகோடி
ஊணைதேகமதிற்சுன்னஞ்சேர்க்க
ஒழுங்கின்றமாய்கையெல்லாமோடிப்போச்சே. (௱௧௨)

போச்சென்றுவிடாதேகாரச்சிப்பி
புதுமையுடன்சொல்லுகிறேன்கும்பிடாவை
நீச்சென்றவோடதனைவாங்கிமைந்தா
நிலையாதவழலைதனைவேசுத்திசெய்து
பேச்சொன்றுமில்லாதபொன்கபுரிவாங்கி
பெருமையுள்ளசத்தியதுகூடச்சேர்த்து
மூச்சென்றதன்னீரால்கலவத்தாட்டி
மூர்க்கமுடனாட்டியபின்வட்டுபண்ணே. (௱௧௩)

சத்தபற்பம்.

பண்ணியதவட்டதனைபுலர்த்திமைந்தா
பாலகனேமண்சிலைப்பதிவாய்ப்பண்ணி
சென்னிமையைநோக்கியந்தப்புடத்தில்வைத்துத்
தீப்பிடித்துயெரிகின்றபருவந்தன்னில்
தன்னிமையாக்கவசமதையெடுத்துமுன்போல்
தன்னீருற்றுநாட்டிவட்டிச்செய்து
புண்ணியனேமண்சிலைதானுஞ்செய்து
புத்தியாய்முன்போலேபுடத்திற்போடே. (௱௧௪)

போட்டபுடமாறியபின்னெடுத்துப்பாரு
பூரணத்தின்கிருபையினால்வெளுத்துநீறும்
நாட்டிகமாய்நீறினதைவைத்துக்கொண்டு
சமரசகாயந்திசந்தியுள்ளேகொண்டால்
நாட்டியதோர்வாதபித்தஞ்சிலேற்பனத்தால்
நாடிநின்றவியாதிகளும்நசித்துப்போகும்



பூட்டியதோர்திரையகலும்புதுமைகாணும்
பூரணமாய்ச்சிவயோகம்புனிதமாமே, (௱கூரு)

புனிதமுள்ளசிவயோகமெடுத்துப்பார்த்துப்
பூரணமாயந்தறிவிற்புனிதமாகக்
கெனிதமுடன்மவுனமதிலுரைத்துமைந்தா
கேசரத்திற்கேசரியாம்பூரணத்தைநம்பி
தொனிதமுள்ளசிலம்பொலியைக்கண்டுநீயுந்
தூண்டாதமணிவிளக்கைத்தொழுதுபோற்றி
மணிநாதமேனும்மணியைமனதிற்கொண்டு
மார்க்கமுள்ளசத்திசிவ[illegible]கிமைகேளே. (௱கூசு)

கேளப்பாசத்திசிவமகிமைதன்னைக்
கிருபையுடனறிந்தபார்வணங்கப்போறார்.
காலப்பாதனையறியார்தலையைக்காணார்
காலுதலைவேறாகக்கருதுவான்பார்
மேலப்பாசத்தியென்றரூபந்தன்னை
மெய்யானவுயிர்சிவத்துக்குறுதிசெய்தால்
தாளப்பாதிரந்தமுர்தங்கொள்ளலாகுஞ்
சத்திசிவபூசையில்லான்மடையன்தானே. (௱கூஎ)

பத்தியம்.

தானென்றமடையரவர்வெகுபேருண்டு
தன்மையுடன்சத்திசிவமறிந்திருந்தும்
நானென்றவாணவத்தைநீக்கமாட்டார்
நலமானபூரணத்தைநம்பமாட்டார்
தேனென்றகாயாதிகர்ப்பங்கொள்ளார்
திருடரவர்வாய்மதங்கள்திறமாய்ப்பேசி
சோறென்றகுருவினிடமனதைக்கிண்டிக்
கூடயிருந்துபோவாரைக்குறித்துத்தள்ளே, (௱கூஅ)

தள்ளுவதுபெண்ணொடுபுளியுமாகா
தாம்பூலமீனிறைச்சிசற்றுமாகா
தள்ளுவதுயானையுடன்கோபமாகா
துணையானதாரம்விட்டுமறுதாரமாகா
அல்லலென்றவலைவாகாவர்ஞ்சையாகா
வானந்தமானதொருவழிவில்நில்லு
சள்ளையென்றசாகரத்தின்கூடஓடே
சற்றுறவுமாகாதுதெளித்துநில்லே, (௱கூகூ)

தனித்திருந்தசத்திசிவபூஞ்சைபண்ணுந்
தன்மையுடன்பாலமூர்தந்தானேகொள்ளுந்
தொனித்திருந்தபூரணத்தைச்சுகமாய்ப்பூசிச்
சுகமாகச்சிவயோகத் துறையின்நில்லு
மணித்திருத்தாளானகமலமூர்தங்கொண்டு
மயங்காதபூரணத்திற்றீபங்காணும்
அணித்திருந்தசிவயோகத்தண்டத்துச்சி
யம்பரமாஞ்சிதம்பரத்திலடங்குமுத்தே. (உ௱)

மூத்தானசிவயோகமிருநூறுதன்னை
முறையானகுருவெனவென்றெடுத்துப்பார்த்து
சித்தானசித்துவிளையாடுமைந்தா
சிவயோகமார்க்கமடாதிறந்தான்மெத்த
பத்தாசைகொண்டுமௌனமவுனமாகப்
பதிவாகச்சிவயோகமிருநூறும்பார்
வித்தானபிறவியதுவற்றுப்போகும்
மேலானசிவயோகம்விளங்குமுற்றே. (உ௱க)

இராமதேவர்சிவயோகம் உ௱- முற்றிற்று,

